
ஹிந்துமித்திரன்

மலர் 20 ஈஸ்வர, தை (ஜனவரி 1998) விலை: ரூ. 3 இதழ்: 6



துறவியர் மாநாட்டுச் சிறப்பிதழ்

ஹிந்து மித்திரன்

ஆசிரியர்: ஆர்.பி.வி.எஸ். மணியன்

மலர்: 20 ஈஸ்வர, தை (ஜனவரி 1998) இதழ்: 6

இந்த இதழில்

மடாதிபதிகள், துறவியர்கள் மற்றும் ஆன்றோர்கள் வேது மாநில மாநாடு, மதுரை

மதிநுதல் இமயச்செல்வி மீனாக்ஷியாய் வீற்றிருந்து அருளாட்சி புரிந்துவரும் நான்மாடக் கூடலில், சங்கம் வைத்து தமிழ் வளர்த்த வைகைக் கரையின் வளநகரில், சமயக்குரவர் நால்வரும் பதிகம் பாடிப் போற்றிய புண்ணிய மதுபரையம்பதியில்

விசுவ ஹிந்து பரிஷத் அமைத்துள்ள

அறவழிகாட்டும் ஆன்றோர் பேரைவயின்

வேது மாநில மாநாடு

ஈசுவர ஆண்டு, மார்கழி 11,12 தேதிகளில் (டிசம்பர் 26,27-1997) சிறம்புற நடைபெற்றது.

ஸ்ரீ சேதுபதி மேல்நிலைப் பள்ளியில் "சிவநெறிச் செல்வர் கருமுத்து சொக்கலிங்கம் நினைவு அரங்கில்"

தமிழம் முழுவதிலிருந்தும், குருமஹா சன்னிதானங்கள், ஆதினர்கள், மடாதிபதிகள், துறவியர், ஆன்றோர் பெருமக்கள், பெண் துறவியர்கள் **11 பேர் உட்பட மொத்தம் 121 பேர்** பங்கேற்று அருள்பாலித்தார்கள்.

கோபூஜை: மாநாட்டு செயற்குழுவின் செயலாளர் வழக்கறிஞர் T. திலகர் அவர்கள் தம்பதி சமேதராக கோபூஜை செய்தார்கள்

கஜபூஜை: மாநாட்டு செயற்குழுவின் தலைவரும், ஆலய பாதுகாப்பு கமிட்டியின் மாநிலத் தலைவருமான திரு. சி.கே. நரசிம்மாச்சாரி அவர்கள் தம்பதி சமேதராக கஜபூஜை செய்தார்கள்.

மங்கள நாதஸ்வர இன்னிசையோடு, வேதகோஷங்கள் முழங்க துறவியர் அனைவருக்கும் **பூரண கும்ப வரவேற்பு** அளிக்கப்பட்டது.

கிராமக்கோயில் பூஜாரிகள் பேரவையின் மாநில அமைப்பாளர் திரு. டி.எஸ். கோதண்டராம சர்மா அவர்கள் மதுரையம்பதியில், மாநாட்டுக்கு வருகை தந்த துறவியர், மற்றும் அனைவரையும் வரவேற்று வரவேற்புரை நிகழ்த்தினார். மாநில விசுவ ஹிந்து பரிஷத் தலைவர் திரு. ஆர். ஸ்ரீஹரி அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார்கள்.



மாநாட்டை திருப்பராய்த்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவனததின் தலைவர் தவத்திரு நித்தியானந்த சுவாமிகள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து உணர நிகழ்த்தினார். இதைத் தொடர்ந்து வடலூர் தவத்திரு ஊரன் அடிகளின் அறிமுக உரையும், பேரூர் ஆதினம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் தலைமை உரையும் அமைந்தது.

அரங்கின் மையக்கருத்து

1. திருக்கோயில்கள் - திருமடங்கள் தீர்த்தஸ்தலங்கள் இவற்றைப் பேணுதல், பாலிவு செய்தல், புதுப்பித்தல் மற்றும் இவற்றின் வருவாய் நிலைமை அதி கரித்தல்.

2. சமுதாயத் தீமைகளான தீண்டாமை, ஜாதி மோதல்கள் அகீயவற்றை அறவே போக்கி ஒருங்கிணைந்த ஹிந்து சமுதாயத்தை அமைப்பதில் துறவியர் பெருமக்களின் பங்கு. கலாச்சார சீரழிவுகள் பாதிக்கப்பட்டு வரும் இளைய தலைமுறைக்கு சமயப்பயிற்சி அளித்து அவர்களை நமது பண்பாட்டில் ஊன்றி நிலை பெறச் செய்தல் - இப்பணியில் சமய உணர்வுள்ளோர்கள் ஈடுபடுத்துதல்.

மாநாட்டின் முதல் அரங்கில், உடுப்பி போஜாவர் மடாதிபதி, பூஜ்ய ஸ்ரீ விசுவேச தீர்த்த சுவாமிகளின் தலைமை உரையும், ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ கலியான் வானமாமலை இராமனுஜ ஜீயர்

சுவாமிகளின் (நான்குனேரி) தொடக்க உரையும் இருந்தது. பல துறவியர்கள் தங்கள் கருத்துரைகளை வழங்கினார்கள். வழக்கறிஞர் திரு. சீனிவாச ராகவன் அவர்கள் திருக்கோவில்கள் நிர்வாகத்திலுள்ள சட்ட நுணுக்கங்களை விளக்கி உரையாற்றினார். இந்த அரங்கின் நிகழ்ச்சிகளை சுவாமி ராகவானந்தா அவர்கள் தொகுத்து வழங்கினார்.

2வது அரங்கில், காஞ்சீபுரம் தொண்டை மண்டல ஆதினம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிராகச தேசீக பரமாச்சார்ய சுவாமிகளின் தலைமை உரையும், பல துறவியர்களின் கருத்துரையும், நிறைவாக கௌமார மடாலயம், சிரவை ஆதீனம் தவத்திரு குமர குருபர சுவாமிகளின் தொகுப்புரையுடன் மாநாட்டின் முதல்நாள் நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றன். இந்த அரங்கின் நிகழ்ச்சிகளை சாக்த ஸ்ரீ சிவலிங்கேஸ்வர சுவாமிகள் தொகுத்து வழங்கினார்.


மாநாட்டின் இரண்டாவது நாள் காலையில் நடைபெற்ற (மூன்றாவது) அரங்கில் கயிலைப்புனிதர் தவத்திரு முத்துகுமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் காசிமடம், யஜமான் சுவாமிகள், திருப்பனந்தாள் அவர்களின் தொடக்க உரையும், சூரியனார் கோயில் ஸ்ரீ கந்த பரம்பரை சிவாக்ரயோகிகள் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சங்கரலிங்க தேசிக பரமாச்சாரிய ஸ்வாமிகளின் தலைமை உரையும், அதைத் தொடர்ந்து பல துறவியர்களின் கருத்துரைகளும் அமைந்தன. இந்த அரங்கின் நிகழ்ச்சிகளை வேம்படிதானம் தவத்திரு சிதாபானந்தா தொகுத்து வழங்கினார்.

மாநாட்டின் 'தீர்மானங்கள்' 'ஓம்' என்ற அங்கீகார ஒலியுடன் நிறைவேற்றப்பட்டவுடன் அரங்கு நிறைவு பெற்றது.

மீண்டும் ஸ்ரீ சேதுபதி மேல்நிலைப்பள்ளியில் மாலை 4.30 மணிக்கு எழுச்சி மிக்க மாபெரும் ஊர்வலத்தை திருவேடகம், விவேகானந்தா கல்லூரியின் செயலர் தவத்திரு சதானந்த சுவாமிகள் காவிக் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

ஊர்வலம்: முதலில் 250க்கும் மேற்பட்ட பெண்கள் பூஜிக்கப்பட்ட கலசத்துடன் வந்தனர். அவர்களைத் தொடர்ந்து பெண் துறவியர்களும், அணைத்து மடாதிபதிகள், துறவியர்களும் ஊர்வலத்தில் வந்தனர்.

தமிழகத்தின் முக்கிய பகுதிகளிலிருந்து கிராமக்கோயில் பூஜாரிகள் பேரைவயின் உறுப்பினர்கள் அணி அணியாக, தங்களது ஒன்றிய, மாவாட்ட பேனர்களைப் பிடித்துக்



கொண்டு உற்சாகமான குரலில்,

ஹிந்து என்று சொல்லுவோம்!
தலை நிமிர்ந்து செல்லுவோம்! என்றும்

"மதசார்பற்ற அரசே! ஆலயத்தை விட்டு வெளியேறு" போன்ற கோஷங்களுடன் வந்தனர்.

இவர்களைத் தொடர்ந்து ஆன்மீக இயக்கங்கள், மகளீர் சங்கங்கள் என பலர் அணிவகுத்து வந்தனர்.

வழிநெடுகிலும், ஆன்மீக உணர்வு மிக்க நகர தாய்மார்கள் கோலமிட்டு, திருவிளக்கேற்றி, துறவிகளுக்குப் பாதபூஜை செய்து வரவேற்பு கொடுத்தனர்.

1500 பேருக்குமேல் பங்கேற்ற இந்த ம.ழுச்சிமிகு ஊர்வலம் 4 மாசி வீதிகள் மேலமாசி வீதியில் அழகுற அமைக்கப் பெற்றிருந்த கம்பீரமான பொதுக்கூட்ட மேடை அருகே நிறைவு பெற்றது.

மாலை 6.40 மணிக்கு திருமதி. பொன். தெய்வ நாயகி அவர்களின் (விசுவ ஹிந்து பரிஷத்தின் மாநில மகளிர் அணி அமைப்பாளர்) தேவாரப் பாடலுடன் பொது வரவேற்பு நிகழ்ச்சி துவங்கியது.

மாநாட்டு செயற்குழுத் தலைவர் திரு. சி.கே. நரசிம்மாச்சாரி அவர்கள் மாநாட்டு வரவேற்புக்குழு தலைவர் திரு. ஆர். ஸ்ரீஹரி மற்றும் மேடையில் எழுந்தருளியிருந்த துறவியர்

பெருமக்களையும், ஏனையோரையும் அன்புடன் வரவேற்று உரை நிகழ்த்தினார்.

தருமையாதீன குரு மஹா சன்னிதானம்.

ஸ்ரீலஸ்ரீ ஷண்முக தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் தலைமை தாங்கி உரை நிகழ்த்தினார்.

திருவாவடுதறை ஆதீன இளைய சன்னிதானம்



ஸ்ரீலஸ்ரீ காசி விசுவநாத தேசிக பரமாச்சார்ய சுவாமிகள்.

சூரியனார் கோயில் ஆதினகர்த்தர், கும்பகோணம் பெரியமடம் சுவாமிகள், தவத்திரு ஊரன் அடிகள், பேரூர் ஆதினம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள் தவத்திரு இராகவானந்தா, தவத்திரு சதானந்த சுவாமிகள், திருவேடகம், ஆர்.எஸ்.எஸ். மாநில செயலாளர் டாக்டர் இரா. வன்னியராஜன் ஆகியோரது சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

விசுவ ஹந்து பரிஷத்தின் மாநில அமைப்புச் செயலாளர் திரு. சு. விசுவநாதன் அவர்கள் மற்ற தீர்மானங்கள் விளக்கி சொற்பொழிவாற்றினார்.

தருமையாதீன குரு மஹா சன்னிதானம் அவர்கள் கிராமக் கோயில் பூஜாரி, சிவாச்சாரியார், பட்டாச்சாரியார்,



ஓதுவார், வேதவித்து ஆகியோர்களுக்கு முறையே வழிபாட்டு வித்தகர், ஆகமஸ்ரீ, ஆகம விபூஷண், திருமுறைச் செல்வர், வேதவிபூஷண் என்ற பட்டங்கலை அளித்து கௌரவித்தார்கள்.

பேரூர் ஆதினம் அவர்கள் அனைவருக்கும் வழக்கறிஞர் ஊ. திலகர் அவர்களின் நன்றியுரையைத் தொடர்ந்து மங்கல வாழ்த்துடன் மதுரையம்பதியில் நடைபெற்ற இரண்டு நாள் துறவியர் மாநாடு இனிதே நிறைவு பெற்றது.



கடந்த 7 மாநாடுகளைவிட இந்த 8-வது மாநாட்டில் அதிக எண்ணிக்கையில் துறவியர்கள் பங்கேற்றுள்ளனர். (121), துறவியர் தொடர்பு அமைப்பாளர் திரு.கே. ஜகதீசன், மாநாட்டு அமைப்பாளர் சுவாமி இராகவானந்தா, மாநில அமைப்புச் செயலர்ளர் திரு. விசுவநாதன், மற்றும் ஸ்ரீ சி. கனகராஜன், ஸ்ரீ டி.எஸ். கோதண்டராம சர்மா, கிராமக்கோவில் பூஜாரிகள் பேரவை மாநில அமைப்பாளர் ஆகியோர் எண்ணற்ற துறவிகளை மாநாட்டுக்கு முன்பு நேரில் சந்தித்தனர். மாநாட்டின் வெற்றிக்காக ஒருமாத காலத்துக்கும் மேலாக கடுமையாக உழைத்த மதுரை மாவட்ட விசுவ ஹிந்து பரிஷத் மற்றும் இராமக்கோவில் பூஜாரிகள் பேரவை பொறுப்பாளர்கள் அனைவருக்கும் குறிப்பாக அலங்காநல்லூர் திருநாவுக்கரசு, ஸ்ரீ பிரகாஷ் ஆகியோருக்கும் மாநாட்டுக்காக வருகை புரிந்த துறவியர்கள் மற்றும் தொண்டர்கள் அனைவரும் தங்கும் வசதி செய்து கொடுத்த மதுரை பாங்கூர் தர்மசாலா நிர்வாகிகளுக்கும், ஊழியர்களுக்கும், மாநாடு நடைபெற இட வசதியளித்து ஸ்ரீ சேதுபதி மேல்நிலைப்பள்ளியைத் தந்துதவிய செயலாளர்கள் திரு. மீனாட்சிசுந்தரம், திரு. கு. விசுவநாதன் மற்றும் எல்லா வகையிலும் ஒத்துழைப்பு நல்கிய தலைமையாசிரியர் திரு. ராமன் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும்,

உணவு ஏற்பாட்டிற்காக தருமபுரம்

மடத்தினை தந்துதவிய தருமையாதீன குருமஹா சன்னிதானம் அனைவரும் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம்.

மாநாடு நன்முறையில் நடைபெற பொருளுதவியும், நிதியுதவியும் வழங்கியவர்களுக்கும் மாநாட்டு வரவேற்புக் குழு உறுப்பினராகி உதவி புரிந்த அனைவருக்கும் மடாதிபதிகள், துறவியர்களின் பரிபூரண நல்லாசிகளுடன் இறைவனின் திருவருளும் துணை புரிய வேண்டுமென மனதார வேண்டுகிறோம்.

தவத்தால் சிறந்தோங்கிய அத்துணை துறவியர் பெருமக்களின் பொற்பாதங்களைப் பணிந்து நாடு செழிக்க, தர்மம் தழைக்க அருள் வேண்டி பிராத்தனை செய்கிறோம்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

1. ஹிந்து கோவில்களை பராமரிக்க, பாதுகாக்க முழுஅதிகாரம் பெற்ற தனித்தியங்கும் வாரியமும், தனி கோயில் பாதுகாப்பு படையும் அமைக்க வேண்டும். கோயில் நிலங்களுக்கு நிலச் சீர்திருத்த சட்டங்களிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும். திருக்கோயில்கள் திருமடங்களுக்கு வியாபார நிறுவன மின் கட்டண விகிதத்தைக் குறைத்து குடியிருப்புகளுக்கான கட்டண விகிதமே வசூலிக்க வேண்டும்.

சைவ, வைணவ திருக்கோயில்களின் அர்ச்சனை, வழிபாட்டு நெறிகளில் மாற்றம் கொண்டு வர அறநிலையத்துறை விரும்பினால் தென்னாட்டிலுள்ள சைவ, வைணவ ஆதீனகர்த்தர்கள், மடாதிபதிகள் அனைவருடைய கருத்துக்களையும் தெரிவித்துதான் செயல்பட வேண்டும்.

2. அன்னிய பண வரவு மற்றும் மதமாற்றத்தை தடை செய்யும் சட்டம் இயற்ற வேண்டும்.

3. இந்து ஒற்றுமையைப் பாதிக்கும் ஜாதிக் கலவரங்களை தடுத்து நிறுத்த வேண்டும்.

4. . 1991ல் அவசரமாக நிறைவேற்றப்பட்ட வழிபாட்டுத் தலங்கள் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும்.

5. கலாச்சாரச் சீரழிவை தடுத்து நிறுத்த சமயவகுப்பு, திருவிளக்கு பூஜை, கூட்டு வழிபாடு ஆகியவற்றை பெரும் எண்ணிக்கையில் நடத்த வேண்டும்.

6. இராமராஜ்யம் அமைக்கும், ஹிந்துக்களின் நலன்களைக் காக்கும், நிலையான ஆட்சியைத் தர முன்வரும் கட்சிக்கே வாக்களிக்க வேண்டும்.

7. துறவுநெறி மேற்கொள்ள விரும்பும்

பெண்களை ஊக்குவிப்பதுடன் பெண் துறவியர் மடாலயங்களுக்கும் முழுமையான ஆதரவு அளிக்க வேண்டும்.

மாநாட்டில் பேசிய துறவியர்களின் கருத்துரைகள்:

சுவாமி நித்தியானந்தா:

விசுவ ஹிந்து பரிஷத் மற்றும் துறவியர்கள் சேர்ந்து ஜாதி, மத பூசல் கேடுகளிலிருந்து சமுதாயத்தை விடுவிக்க வேண்டும். மாசற்ற மனமும், மெய்ப்பொருளை உணரும் நோக்கமும் தர்மத்தைப் பாதுகாக்கும் அமைப்புகள், வேற்றுமைகளை சுயநல ஆசைகளை புறக்கணிக்க வேண்டும்.

சமயமும், கல்வியும் சமுதாயத்தின் இரு கண்களாகத் திகழ்கின்றன. 'ஆத்மனோ மோக்ஷார்த்தம் ஜகத் ஹிதயாச' என்று சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார். நம்மிடத்திலுள்ள கேட்டை திருத்தியமைப்பவர்களே துறவியர்கள் ஆவர். சொல், செயல், சிந்தினை மூன்றிலும் இணக்கம் தேவை. மக்களை நேர்மையானவர்களாகவும், தூய்மையானவர்களாகவும் மாற்ற இம்மாநாடு வழிகாட்டும். வேற்றுமையில் ஒற்றுமை காணவேண்டும். மனதில் விருப்பு, வெறுப்பு இல்லாதவர்களாக நாம் உருவாக வேண்டும்.

தவத்திரு ஊரன் அடிகள்




மாநாட்டின் மூன்று அரங்கங்களின் கருத்துரைகளை விளக்கி அறிமுக வரை நிகழ்த்தினார்.

திருக்கோயில்களை துறவியர்கள், மடாதிபதிகளே நிர்வாகிப்பதுதான் மேலானது. அதற்கடுத்த பட்சமாக, அரசுக்கு பயப்படாத தனத்தியங்கும் அறவோர் வாரியம் நிர்வாகிக்கலாம். நிச்சயம் அரசு ஆலய நிர்வாகத்தை விட்டு வெளியேற வேண்டும்.

ஜாதி மோதல்கள், கலவரங்கள் நிகழாமல் சமுதாய ஒற்றுமை ஏற்பட துறவியர்களை முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

கலாச்சாரச் சீரழிவு, பத்திரிக்கையின் திரைப்படம் - தொலைக்காட்சி மூலமாக வேகமாகப் பரவி வருகிறது. இதைத் தடுக்க மடாலயங்கள், துறவியர்கள் இளைய சமுதாயத்திற்கு சமய வகுப்புகளை நடத்த முன் வரவேண்டும்.

போரூர் ஆதினம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள்



துறவிகள் ஒருங்கிணைந்து பணிபுரிவது பெருமைக்கு உரியது. கோவில்களில் பல சிக்கல்கள், கேடுகள் உள்ளன. இவற்றை நீக்கிட, துறவியர்கள் தங்களை அங்காங்குள்ள ஆலயச் செயல்பாடுகளுடன் நம்மை இணைத்துக் கொள்ள வேண்டும், திருக்கோயில்களுக்கு விளக்கேற்றும் பொறுப்பை சமுதாயத்தினர் ஏற்கச் செய்யவேண்டும், திருக்குளங்கள், கோவில் வளாகங்களின் பராமரிப்பை வணிக நிறுவனங்கள் ஏற்கும்படி செய்யவேண்டும். சமுதாயத்தில் ஒற்றுமையை நிலவச் செய்யும் வகையில் கூட்டு வழிபாடு, சமய வகுப்பு, ஆன்மீக கூட்டங்கள்; ஆன்மீக அமைப்புகளை ஒருங்கிணைந்து மாவட்ட மாநாடுகள், கருத்தரங்குகள் இவற்றை நடத்தி துறவியர்கள் தொண்டாற்ற வேண்டும்.

உண்டியலில் பக்தர்கள் போடும் பணம் செலவிடப்படும் விவரத்தை தெரியப்படுத்த வேண்டும். கோயில் வருமானத்தை அற்பணிகளுக்கு மட்டுமே செலவிட வேண்டும்.

சமயத்தின் அடிப்படையில் யாரும் தீண்டத்தகாதவர்கள் இல்லை. அரசியல்தான் ஜாதி உணர்வை தூண்டி வருகிறது. ஜாதிக்கலவரம் வேதனைக்குரியது. அறநெறி சேராத கல்வி மக்களை நெறிப்படுத்தாது. கல்விக் கூடங்களில் ஆன்மீக கல்வியைப் போதிக்க வேண்டும்

உடுப்பி பேஜாவர் மடாதிபதி பூஜ்ய ஸ்ரீ விசுவேச தீர்த்த சுவாமிகள்:



திருக்கோயில்கள் திருமடங்கள் அனைத்தும் பொதுமக்களுக்கான சேவை

மையங்களாக மாற வேண்டும். எல்லோரையும் இறைவனின் குழந்தைகளாகக் கருதி தொண்டு செய்வதன் மூலமே இறைவன் அருளைப் பெறமுடியும்.

கோவில் நிர்வாகம் அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கக் கூடாது. அரசு நுழையும் இடங்களில் அரசியல் நுழைந்து, ஊழல் நுழைந்து சீர்கேடுகள் ஏற்படும் நிலை உருவாகிறது. எனவே, திருக்கோயில் நிர்வாகம் துறவியர், மடாதிபதிகள், பக்தர்களிடம் ஒப்படைக்கப்பட்டு அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படும் நிலை உருவாக வேண்டும்.

தமிழகத்தில் ஆங்காங்கே ஜாதிக் கலவரங்கள் நடப்பது இந்து சமுதாயத்தில் பலவீனப்படுத்தும் முயற்சியே ஆகும். எனவே, அனைவரும் சகோதரர்கள் என்ற உணர்வை துறவியர்கள் உருவாக்க வேண்டும்.

சமுதாயம், சாதுக்கள், அரசு ஆகிய மூன்று அமைப்புகளும் சேர்ந்து செயல்படும் நிலை விரைவில் உருவாகும்.

தருமபுர ஆதீன குரு மஹா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக பரமாச்சார்ய சுவாமிகள்:

சகோதர உணர்வு அனைவருக்கும் தேவை. தீண்டாமை ஒழிந்து அனைவரும்



ஓரினம் என்ற எண்ணம் வர வேண்டும். ஒரு குறிப்பிட்ட இனத்தாரை புறக்கணிப்பது கூடாது. அவர்களின் நிலை உயர உளப்பூர்வமாக பாடுபட வேண்டும்.

அரசின் சலுகைகளால் தாழ்த்தப்பட்டவர்கள் போதுமான வளர்ச்சியடையவில்லை. சலுகைகள் மனிதர்களை உயர்த்துகின்றதா அல்லது தாழ்த்துகின்றதா என ஆய்வு செய்ய வேண்டும்.

சாதிக் கலவரங்கள் ஏற்பட்டு சகோதரத்துவம் மறைந்து வருகிறது. அனைவரும் சமயநெறிப்படி வாழ்ந்து சமுதாய ஒற்றுமையைக் காக்க வேண்டும்.

சூரியனார் கோவில் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சங்கரலிங்க தேசிக பரமாச்சார்ய சுவாமிகள்



தமிழகத்திலுள்ள இந்து கோயில்களுக்கு ஐந்து லட்சம் ஏக்கர் நிலம் உள்ளது. இதிலிருந்து ஆண்டுதோறும் ரூபாய் 36 கோடி வருமானம் வரவேண்டும். ஆனால் நிலச் சீர்த்திருத்த சட்டங்கள் அமலுக்கு வந்த பிறகு வருமானம் தற்போது ரூ.2 கோடிக்கும் குறைவாகவே கிடைக்கிறது. குறைந்த குத்தகையையும் சரியாக வசூலிக்காமல் இன்று குத்தகை பாக்கி ரூபாய் நூறுகோடியைத் தாண்டிவிட்டது.

எனவே கோவில்களைப் பராமரிக்க தனித்தியங்கும் வாரியம் அமைக்கப்பட வேண்டும்.

திருபனந்தான் மடம் யஜமான் சுவாமிகள் தவத்திரு முத்துகுமார சுவாமி தம்பிரான் அவர்கள்:

பள்ளிக் கூடங்களில் சிறார்களிடம்



சமயக் கல்வி அளிக்க வேண்டும். இன்றைய கல்விமுறை சமயத்தை வளர்ப்பதாக இல்லை. சமயக் கல்வி கற்பிக்க அரசு சட்டம் கொண்டுவர வேண்டும், மாணவர்களிடையே ஒழுக்கத்தை வளர்க்கும் வகையில் கல்வி அமைய வேண்டும், சீரழிவை நோக்கி சென்று கொண்டிருக்கும் மாணவ சமுதாயத்தை நெறிபடுத்த சமயப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். ஆசிரியர்களுக்கும் பயிற்சியளித்து ஆசிரியர் மாணவ சுமுக உறவு ஏற்படச் செய்ய வேண்டும். இளைய சமுதாயத்தை நெறிபடுத்துவதன் மூலம் கலாச்சார சீரழிவைத் தடுக்க முடியும்.

திருவாவடுதுறை ஆதீன இளைய சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ காசி விசுவநாத தேசிக பரமாச்சார்ய சுவாமிகள்:

நம் நாட்டில் பலமொழி, இனம் என





பேசப்பட்டு வந்தாலும் ஆன்மீகம் காரணமாக நாம் ஒற்றுமையாக இருக்கிறோம். ஆகமம் வேதம் வழங்கிய புண்ணியபூமி இது. கோயில்களைப் பாதுகாக்க அரசால் உருவாக்கப்பட்ட அமைப்பு சரியாகச் செயல்படுவதாகக் கூற முடியாது.

தமிழில் அர்ச்சனை வரவேற்கத்தக்கது என்றாலும் பிறமொழி மீது வெறுப்பு கூடாது. கோயில்களின் பாரம்பரியத்தைக் காப்பாற்ற வேண்டும். ஒவ்வொருவருக்கும் தேசப்பற்று மிகவும் அவசியம்.

ஸ்ரீமத் பரம்ஹம்ஸோத்யாதி ஸ்ரீ கலியன் வானமாமலை ராமானுஜ ஜீயர் சுவாமிகள்

(நான்குநேரி)

நாட்டிற்கு விடுவுகாலம் ஏற்பட்டு வருகிறது. நாட்டிற்கு உயர்வைத் தரும் கடமை துறவிகளைச் சார்ந்தது. ஜாதிப்பிரிவினையை நாயன்மார்களும், ஆழ்வார்களும் அனுமதிக்கவில்லை.

பரிவ்ராஜன் என்றால் எல்லா திக்குகளிலும் திரிபவர் என்று பொருள். நாம் அப்படி பயணம் செய்து நல்வழி காட்டவேண்டும். இளைய சமுதாயம் நம்மைப் பின்பற்றத் தயாராக உள்ளது. நம் சண்டை சச்சரவுகளை அறவே ஒழித்து ஒன்று சேர வேண்டும். பெண்களுக்கு முக்கியத்துவம் அதிக பொறுப்பும் அளிக்க வேண்டும்.

தொண்டை மண்டல ஆதினம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாச்சார்ய சுவாமிகள்

பழைய பண்பாட்டை ஞாபகப்படுத்த வேண்டும். திருஞானசம்பந்தர் ஜாதி வித்தியாசம் பாராட்டவில்லை, அந்தணர் ஆகிய அப்பூதியடிகள், அப்பரிடம் காட்டிய மரியாதையை நினைவுறுத்த வேண்டும். சமுதாயத்தில் சரியான சமய உணர்வு ஏற்படாததே வேற்றுமைக்கு

காரணம்.

கூனம்பட்டி ஆதினம் ஸ்ரீலஸ்ரீ இராஜலிங்க மாணிக்க வாசக சுவாமிகள்:

'கலிஅசுரன்' கேட்ட வரங்களின் விளைவாக பல விரும்பத்தகாத பரிணாமம் ஏற்பட்டுள்ளது. வேற்றுமை இல்லையென்று பேசினாலும் நடைமுறையில் அது இருக்கவே செய்கிறது. இதை மாற்ற வேண்டியது மிகவும் அவசியம் பாமரர்கள்களைத் தேடிச் சென்று பக்தியைப் பரப்ப வேண்டும்.

புதுக்கோட்டை திலகவதியார் திருவருள் ஆதினம் டாக்டர் சாயிமாதா சிவ பிருந்தா தேவி

ஹிந்து சமயம் என்பது காலத்தை கடந்தது ஆகும். ஹிந்து என்பது 'ஹிம்' மற்றும் 'து' என்று பிரிக்கப்படுகிறது. இதன் பொருள் பிறர் துக்கத்தை இன்னலை, இடர்களை நீக்குபவர்கள் ஹிந்துக்கள். ஸ்ரீ ராமானுஜர், "காயம் பட்டவர்களை அல்லது துன்பத்தால் வருந்துபவர்களை கண்டால் அவர்களைப் போலவே தான் மாறிவிடுவேன்" என்று கூறியதுபோல நாமும் பிறர் துயர்துடைக்க முன் வரவேண்டும்.

ஹிந்துக்களாக உள்ளவர்களே நமது தர்மத்தை ஏசுகிறார்கள். 'காட்டுமிராண்டித்தனம்' என கேலி செய்கின்றனர். இதனைப் பொறுத்துக் கொண்டு இருக்கலாமா?

கௌமார மடாலயம் சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள்:



ஜாதி மோதல்களை தடுத்து நிறுத்தி சமய ஒற்றுமையை உருவாக்கும் அரும்பணியை மடாதிபதிகளும், துறவியர்களும், ஹிந்து ஒற்றுமையில் ஆழ்ந்த பற்றுள்ளவர்களுமே செய்ய முடியும். இவர்களைனவரும் சமயச் சொற்பொழிவாளர்களுக்கும் கிராமம் கிராமமாகப் பிரச்சாரம் செய்து ஒற்றுமையுணர்வை வளர்க்கச் செய்ய வேண்டும் என மாநாட்டின் இரண்டாவது அரங்கில் பேசிய அனைவரது கருத்துக்களையும் கோர்வையாக எடுத்துக் கூறி தொகுப்புரை நிகழ்த்தினார்.

கோவை காமாட்சிபுரி ஆதினம் சாக்தஸ்ரீ சிவலிங்கேஸ்வர சுவாமிகள்



தென் மாவட்டங்களில் நடந்த ஜாதிக் கலவரங்களை சட்டம் மூலமாகவோ, அரசு மூலமாகவோ, அரசியல் மூலமாகவோ, அரசியில் கட்சிகள் மூலமாகவோ தடுத்து நிறுத்த இயலாது, ஏனென்றால் தற்போது நடைபெறும் ஜாதிக் கலவரங்கள் அனைத்துமே தங்களது ஒட்டு வங்கிகளை உருவாக்கிக் கொள்ள அரசியல்கட்சிகளின் தூண்டுதலின் பேரில் நடைபெறுவதுதான். பல நூற்றாண்டுகளாக ஜாதி அமைப்பு நம் நாட்டில் நிலவி வந்தபோதும் ஜாதிக் கலவரங்கள் நடந்ததில்லை.

எனவே சமய ஒற்றுமையை மடாதிபதிகளும் துறவியர்களும் மட்டுமே ஏற்படுத்த முடியும். 'ஹிந்து' என்ற உணர்வை வளர்த்து ஹிந்து ஒற்றுமையை வலியுறுத்துவதன் மூலமாக ஜாதிவேறுபாடுகளை களைய முடியும்.

சங்கரன் கோவில் அன்னபூர்ணாபுரம் சுவாமி ராகவானந்தா:



விருதுநகர் மாவட்டத்தில் ஜாதிக்கவரம் நடந்தபோது ஆர்.எஸ்.எஸ், விசுவ ஹிந்து பிரஷத் அமைப்பும் துறவியர்களும் சென்றோம். கிரமாங்களில் மக்கள் தெரிவித்த பொதுவான கருத்து: கிருத்துவ பாதிரிகள் அடிக்கடி வந்து பிரச்சாரம் செய்து மதத்தை மாற்றி பிரச்சனைகளுக்கு விதை ஊன்றிப் போகின்றனர். எனவே கிராம மக்களிடையே துறவியர்கல் தொடர்ந்து ஆன்மீக பிரச்சாரம் செய்யவேண்டும்.

வருகின்ற தேர்தலில், ஹிந்து நலன்களை பாதுகாக்கும் அரசே மத்தியில் உருவாகும் வகையில் நாம் வாக்களிக்க வேண்டும்.

ஸ்ரீமத் குஹானந்த சுவாமிகள் ஸ்ரீ சாரதா சேவாஸ்ரமம், அமராவதிப்புதூர்

குணம், கர்மம் அடிப்படையில் நான்கு வர்ணங்களைப் பிரித்ததாக ஸ்ரீ கிருஷ்ணன் கீதையில் உரைக்கின்றார். இது காலப்போக்கில் ஆயிரக்கணக்கான பிரிவுகளாகி பெருந்தீங்கை தற்போது உருவாக்கி உள்ளன. ஆழ்வார்கள், நாயன்மார்களைப் பின்பற்றி பொருட்படுத்தாது வேற்றுமையைக் களைவோம்.

ஸ்ரீமத் ஆத்மானந்த சுவாமிகள், ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாஸ்ரமம், கரூர்

மடாதிபதிகள் தம்மிடையே உள்ள வேறுபாட்டைக் களைய வேண்டும். நால்வர் ஆகிய சமயக் குரவர்களின் வாழ்க்கையும், ஸ்ரீ இராமகிருஷ்ணர், அன்னை ஸ்ரீ சாரதா தேவி, சுவாமி விவேகானந்தர் வாழ்வும் நமக்கு லட்சியமாக இருக்க வேண்டும். 'காக்கை குருவி எங்கள் ஜாதி' என்று பாடினான் பாரதி. எனவே, தத்துவத்தோடு வாயளவில் நிற்காது நமது நடைமுறையிலும் அது வெளிப்படச் செய்யவேண்டும்.

புதுச்சேரி ஓங்காரபீடம் சுவாமி ஓங்காரனந்தா

தவம், தர்மம், சத்யம் ஆகியவற்றைப் பின்பற்றும் தவசீலர்களாகிய துறவிகள் மேலான ஞானத்தை பாமர மக்களுக்கு வழங்கவில்லை. எளியமுறையில் மக்களுக்கு அறிவூட்டி, பேதங்களை களைவதற்கு துறவிகள் முன்வர வேண்டும்.

தவத்திரு சாது சண்முக அடிகள், சாது சாமிமடம், பழனி

முதலில் துறவிகள் தம்மிடையே வேறுபாடுகல் பார்க்கக் கூடாது. நமது சொல்லும் செயலும் ஒன்றாக இருந்தால்தான் ஜாதிவேற்றுமைகளை சமுதாயத்தில் இருந்து அகற்றும் செயலில் நாம் வெற்றிபெற முடியும்.

ஜினகஞ்சிமடம், மேல்சித்தாமூர் ஜைனமடாதிபதி சுவாமி ஆதிராஜ் லக்ஷ்மிசேன பட்டாரகஸ்வாமிகள்:

இங்கே இறக்குமதியான சமயங்கள் வளர்கின்றன. வளம் கொழிக்கின்றன. நம்மிடையே கட்டுப்பாடும், ஒழுங்குமுறையும் காண்பது அரிதாக உள்ளது. கோவில்கள் நமது சமுதாயத்தின் நாகரீகச் சின்னம். வருமானம் கிடைக்க வழியில்லாத நிலங்களை விற்கவும் தடை! சமயத்தில்

அரசியல் கலவாத நிலை வரவேண்டும். இதற்கு மக்களிடையே நம் செல்வாக்கை வளர்ப்போம். மக்களிடையே ஆதரவு பெருகினால் அரசியல்வாதிகள் பின்னே நாம் போக வேண்டிய அவலநிலை மாறி அவர்கள் நம் பின்னே ஓடி வருவார்கள்.

ஜைன மதம் தர்மத்தைப் போற்றுகின்றது. தர்மத்தின் அடிப்படையில் சமய ஒருமைப்பாட்டை வளர்ப்போம். வலிமை பெற்று பிரச்சினைகளைத் தீர்ப்போம்.

திருவேடகம் விவேகானந்தா கல்லூரி செயலர் சுவாமி சதானந்தா அவர்கள்:

ஒரு நாட்டுக்கு ஆபத்து ஏற்படும் போதெல்லாம் நாட்டை துறவிகள் காத்துள்ளனர். தற்போது நாம் மிக நெருக்கடியான கால கட்டத்தில் உள்ளோம். கடவுள் பக்தியால் என்ன நன்மை கிடைக்கிறதோ அதே பயன் தேச பக்தியாலும் கிடைக்கும்.

திருநெல்வேலி ஸ்ரீ சாரதா கல்லூரி ஸ்ரீமத் சங்கரானந்த சுவாமிகள்:

துறவியாக இருந்தாலும், மாணவனாக இருந்தாலும் யாராக இருந்தாலும் நாட்டுக்குச் சேவை செய்தே ஆகவேண்டும்.

கடவுள் நம்பிக்கை, இந்து சமயத்தின் மீது நம்பிக்கை மற்றும் சேவை எண்ணம் கொண்டவர்கள் யார் என்று பார்த்து ஒழுங்காக ஓட்டுப்போடவேண்டும், கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் ஆட்சிக்கு வந்தால் சீர்கேடுகள் தான் ஏற்படும். சீர்கேடுகளை ஏற்படுத்தும் சுவரொட்டிகள் திரைப்படங்கள் ஆகியவற்றை அரசாங்கம் நீக்க வேண்டும்.

ஆர்.எஸ்.எஸ். மாநில செயலாளர் டாக்டர் இரா. வன்னியராஜன்

நம்நடு எந்த கால கட்டத்திலும் அரசியலை மையமாக வைத்துச் செயல்படவில்லை. தர்மம், பண்பாடு ஆகியவற்றை மையமாகக் கொண்டே செயல்பட்டு வந்துள்ளது. உலகையே வழிநடத்தும் நாடாக நம் நாடு மாறும் வாய்ப்புள்ளது.

தீண்டாமை மிகப் பெரிய பாவம். இந்து மதத்தின் சாபக்கேடான அதை நீக்க வேண்டும். தீண்டாமை ஒழிய இந்துக்கள் கிராமம் கிராமமாக பிரச்சாரம் செய்யவேண்டும்.

தவத்திரு அகிலானந்த சுவாமிகள், குற்றாலம்:

சமுதாயத்தை சீரமைக்கும் பணியில் துறவிகள், மடாதிபதிகள் எல்லோரும்

சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும். இந்து மதத்தின் பெருமையை எல்லா மக்களுக்கும் எடுத்துக் கூறி பணியாற்ற வேண்டும்.

சேலம் ஸ்ரீ குருதேவ் குருகுலம் ஸ்ரீ ஆத்மானந்தா:



சடங்குகளையும், சம்பிரதாயங்களையும் துறவியர்கள் எடுத்துக் கூறத் தவறியதால் கலாச்சார சீர்ழிவிற்கு நாமும் ஒரு காரணம். உயரிய வாழ்வு வாழும் வழிமுறை என்பதை அறஇியாத இளைய சமுதாயத்தினருக்கு நாம்தான் எடுத்துரைக்கவேண்டும்.

கிறுஸ்தவர்களும், முஸ்லிம்களும் இந்துக்களின் ஏழ்மையைப் பபன்படுத்தி மதமாற்றம் செய்வதை தடுத்து நிறுத்தி இந்துக்களைக் காப்பாற்றும் பணியை இப்போதாவது உணர்ந்து நாம் செய்தே ஆகவேண்டும்.

யதீஸ்வரி குமார ப்ரியா அம்பா, ஸ்ரீ சாரதா சமிதி, மதுரை

திரைப்படங்கள் அதிகமாக இளைஞர்களை கலாச்சார சீரழிவுக்கு உட்படுத்தி வருகிறது. நமது சாஸ்திரங்கள் சொல்வதுபடி வாழ்ந்தால் நம் சமுதாயம் முன்னேறும். மடாதிபதிகளும், துறவியர்களும் வாழ்ந்து காட்டவேண்டும்.

தற்போதைய அவசரயுகத்தில் புராண, இதிகாசங்கள் படிப்படு குறைந்ததால் உபன்யாசகர்கள் தோன்றி அதவும் குறைந்து நம் மேன்மையை இளைஞர்கள் தெரிந்துகொள்ளாததால் கலாச்சார சீரழிவு ஏற்பட்டுள்ளது.

பணம் பறிக்கும் பள்ளிக்கூடங்களாக இல்லாமல், புராண இதிகாசங்களை மாணவர்களுக்கு கல்விக்கூடங்கள் போதிக்க வேண்டும்.

சேலம் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி மகிளா ஸமாஜம் யோகினி ஸ்ரீ சிவாம்பா சரஸ்வதி:

புருஷ ஸூக்தம் நான்கு வர்ணங்களின் வருணனையை விராட புருஷனாகத் தருகின்றது. அனைவரும் இறைவனின் வடிவமே. உடலின் பகுதிகளில் ஏற்றத் தாழ்வு இல்லை.

ஆதிசங்கரர், காசியில் எதிரே வந்த

புலையன் கூற்றால் மனம் மாறி மேலான ஆத்ம தத்துவத்தை உணரப்பவன் அந்தணன் ஆயினும் சண்டாளன் ஆயினும் அவரே எனது குரு எனபாடியுள்ளார்.

குமாரக்கோவில் தவத்திரு ஓம்பிரகாஷ் யோகினி:

திருவிளக்கு பூஜை, சமயவகுப்புகள் மற்றும் பல இந்து எழுச்சி மாநாடுகள் மூலம் குமரி மாவட்டத்தில் ஹிந்து சமய உணர்வு மேலோங்கி வருகிறது. ஒற்றுமைப் பணியை சத்சங்கங்கள் சிறப்புற செய்து வருகின்றன. மதம்மாறிப்போன கிருத்தவர் பலர் தாய்மதம் திரும்பி வருகின்றனர். தொடர்ந்து பணியாற்றுவதன்மூலம் சமுதாயச் சீரழிவைத் தடுக்கமுடியும்.

இருநாள் மாநாட்டு நிகழ்ச்சியிலும் மேலும் பல துறவியர்கள்

திருப்போரூர் ஆதினம் ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சிவருனா சுவாமிகள், ஸ்ரீஸித்தேஸ்வரி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சிவசிதானந்த பாரதி சுவாமிகள், அரசூர் சுவாமி அம்பிகானந்தா, கொமாரப்பாளையம் மகாதேவ கோவிந்த சுவாமிகள், திருப்பரங்குன்றம் தவத்திரு அத்வைதானந்தா, திருக்கோவிலூர் எம்பெருமானார் மடம் ஸ்ரீ உ.வே. ஸ்ரீநிவாஸ ராமானுஜாச்சாரியார் சுவாமிகள், நீலகிரி ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள், அம்பா சமுத்திரம் இராமேஸ்வரானந்த சுவாமிகள் ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.

விசுவ ஹிந்து பரிஷத் க்ஷேத்திர அமைப்புச் செயலாளர் திரு ஆர்.பி.வி.எஸ் மணியன்:

புது தில்லியில் அகில பாரத அளவில் விசுவ ஹிந்து பரிஷத் பொறுப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை எடுத்துரைத்தார்.

சில நாட்களில் அகில பாரத அளவில் மடாதிபதிகள், துறவியர்கள் ஒன்றுகூடி தேர்தல் ஆலோசனை மாநாடு நடைபெற உள்ளது.

மதசார்பற்ற அரசு என்று ஒவ்வொரு அரசும் கூறிவருகிறது. ஆனால் இந்து மதத்திற்கு ஒரு நியாயம். பிற மதத்தினருக்கு ஒரு நியாயம் என்ற அளவிலேயே அரசுகள் இயங்குகின்றன. இவையனைத்தும் சிறுபான்மையினரின் ஓட்டு வங்கியை பெறுவதற்குத்தான். மேலும் மதசார்பற்ற அரசு கோவில்களை மட்டும் தன் பிடியில் வைத்திருப்பதன் அர்த்தம் என்ன? கோவில்களை விட்டுவெளியேற அரசு உத்தரவாதம் அளிக்கவேண்டும்.

இந்துக்களை புனிதமாக வணங்கும் பசுக்களை பெரும் எண்ணிக்கையில் வெட்டி இறைச்சியை அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். பசுவதை மற்றும் பசு இறைச்சி ஏற்றுமதியையும் தடை செய்து சட்டம் இயற்றவேண்டும்.

வருகின்ற லோக்சபா தேர்தலில் ராமராஜ்யம் அமைக்கவும் நமது பண்பாட்டில் அழுத்தமான நம்பிக்கை



கொண்டுள்ள, மத்தியில் அறுதிப் பெரும்பான்மையோடு நிலையான ஆட்சியை தரவல்ல, நம் 5 அம்சக் கோரிக்கைகளான

1. அரசு ஆலயத்தை விட்டு வெளியேற வேண்டும்

2. மதமாற்ற தடைச் சட்டம் கொண்டுவர வேண்டும்

3. பசுவதை மற்றும் பசு இறைச்சி ஏற்றுமதி தடைச்சட்டம் கொண்டுவருதல்

4. அயோத்யா, மதுரா, காசி ஆலயங்களை இந்துக்களின் வழிபாட்டுக்கு ஒப்படைத்தல்

5. இராமராஜ்யம் அமைத்தல்

இவையனைத்தையும் ஏற்றுக்கொள்ளும் கட்சிக்கே அனைவரும் தவறாமல் வாக்களிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு நிறைவு செய்தார்.

மதுரையில் நடைபெற்ற துறவியர் மாநாட்டுப் பொதுக்கூட்டத்தில், விருதுகள் அளிக்கப் பெற்று, பாராட்டப் பெற்றவர்கள்:

1. மதுரை சிவஸ்ரீ எஸ். உக்ரபாண்டிய பட்டர் அவர்கள் - 'ஆகம விபூஷண்'

2. மதுரை உப.வே. சௌந்திரராஜ பட்டாச்சாரியார் - 'ஆகம வீபூஷண்'.

3. மதுரை பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய கனபாடிகள் 'வேத விபூஷண்'

4. மதுரை சைவத்திரு குருசாமி தேசிகர் 'திருமுறைச் செம்மல்'

5. எழுமலை ஆத்தங்கரைப்பட்டி திரு. எஸ். நடராஜன் பூஜாரி 'வழிபாட்டு வித்தகர்'

சரித்திர நாயகன்

அயோத்தி ராமபிரான்
அரக்கர் குலத்தவனை
அரசனாக்கினானே தவிர
அவனிடமிருந்து
அபகரித்துக் கொள்ளவில்லை.

தாழ்த்தப்பட்டவனைக் கூட
தழுவிக் கொண்டானே தவிர
தள்ளி வைக்கவில்லை

ஏகப்பத்தினி விரதமேற்று
பெண்மைக்கு
பெருமை சேர்த்தானே தவிர

மீண்டும் மீண்டும்
மதிலாபுரிகளைத்
தேடியலையவில்லை

பிராணிகளின் மீது
பிரியமாயிருந்தான்
பறவைகள் மீது
பாசம் காட்டினான்

மலைகள் அவன்
பாதம் படுவதற்கு
மண்டியிட்டன

திகள் அவனைத்
தொட்டே புனிதமடைந்தன
ராம ராஜ்யத்தில்
கவலையவரையே
காணமுடியவில்லை

உடையவராகத்தான் எல்லோரையும்
உலவிட வைத்தான்-

ஊழ்கண்ட சமயத்தவர்கள்
அவரவர்
உருவுகண்டார்

ராமரின்
ஜென்மபூமி இந்தியாவுக்கே
ஜெப வீடு

நமது நாட்டிற்கான
தொழுகையே அங்குதான்
தொடங்கப்பட வேண்டும்

ராமர்களில் எத்தனையோ
ராமர்களில் உண்டு.

இந்த ராமன் இந்து ராமனல்ல
சரித்திர ராமன்

பாரத
வரலாறு அவனிடமிருந்தே
வாசிக்கப்படுகிறது

பாரதமே அதனால்தான்
பூஜிக்கப்படுகிறது

-கவிஞர் சிதம்பரநாதன்

(ஹிந்து மித்திரன் மலர் 17,
பிமோதூத மாசி (மார்ச் 9), இதழ்
11ல் வெளிவந்தது)

இந்து சமய பாரம்பரியமான

வழிபாட்டு முறையை மாற்றம் செய்யக்கூடாது

மனிதனை பக்குவப்படுத்துவதற்காக தான் சமயங்கள் தோன்றின. சமயம் (சமைத்தல்) மனித குலத்தை நல்வழிப்படுத்த அமைந்த சமயங்களில் தமிழகத்தின் சிகரமாக கருதுவது இந்து சமயமானது. வைணவத்தை "தாயாகவும்", சைவத்தை "தந்தையாகவும்" கொண்டு செந்தமிழையும், வடமொழியையும் இரு கண்களாக கொண்டது நமது ஹிந்து சமயம்.

தமிழ்நாடு மக்கள் கலாச்சாரத்தை "உயிர் மூச்சாக" கொண்டவர்கள். தமிழக அரசு சின்னம் கூட அதனாலேயே கம்பீரமாக சித்தரிக்கிறது. ஸ்ரீவில்லிபுத்தூர் கோபுரத்தை ஹிந்து பூமியில் சமய சான்றோர்களும், மகான்களும், சித்தர்களும் வாழ்ந்த புனிதமான தமிழ்நாட்டில் சமய குரவர்கள் திருமுறை ஆச்சாரியார் 27 பேரும், வைணவ ஆழ்வார்களும், நாளும் இன்னிசைத் தமிழால் தமிழகத்தை பெருமைப்படுத்தியுள்ளனர்.

நமது கலாச்சாரத்தின் ஆணிவேராக உள்ள நான்கு வேதங்கள் உபநிடதங்கள், சைவாகமங்கள், வைணவ ஆகமங்கள் யாவும் வடமொழியில்தான் உள்ளன தமிழகத்தில் உள்ளதும், பிற மாநிலங்களிலும், மேல்நாட்டில் கூட சைவ, வைணவ ஆலயங்கள் அனைத்தும் "ஆகமம்" (வடசொல்) விதிப்படி அமைக்கப்பட்டுள்ளன இவைகள் அனைத்தையும் சிவாச்சாரியார், பட்டாச்சாரியார் ஆகிய (அர்ச்சகர்கள்) முறையாக பயின்றே பணி செய்கின்றனர். இத்தகு சிறப்பு தகுதிகள் உடைய ஆலய அர்ச்சகர்களுக்கும் கருமாதிகள் செய்யும் புரோகிதர்களுக்கும் கூட வித்தியாசம் தெரியாத நமது கல்வி அமைச்சர் 16.11.97 அன்று இரவு 9 மணிக்கு "சன் டீவி" நேருக்கு நேர் நிகழ்ச்சியில் ஆலய அர்ச்சகர்கள் தமிழுக்கும், வடமொழிக்கும் உள்ள தொடர்பு தெரியாமல் விமர்சனம் செய்துள்ளனர் திருமுறை 12-லும் ஞானசம்பந்தர் முதல் சேக்கிழார் உள்ளிட்ட 27 திருமுறை ஆசிரியரும் சைவசித்தாந்த சாஸ்திர நூல் 14-லும் ஆழ்வார்களின் திவ்ய பிரபந்தங்களிலும் "வடசொல்" ஓதும் அந்தணர் வழியில் வந்தவர்களும் பலர் உள்ளனர்.

சமய சான்றோர்கள் யாராவது வடமொழியை இழிவுப்படுத்தி பாடல்களில் பாடியிருக்கிறார்களா? ஆதாரத்துடன் அமைச்சர் அவர்கள் நிருபிக்க இயலுமா? திருஞான சம்பந்தர் திருக்கடையூர் தேவாரத்தில் "பழக்கமோடு அர்ச்சித்த மானிமார்க்கண்டன்" என மரபுகளை மாற்றாமல் உள்ளபடி பூஜித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

வேதம் நான்கிலும் மெய்பொருள் ஆவது நாதன் நாமம் "நமசிவாயமே" "வடசொல்லில் ந,வா,ய" மூன்று எழுத்தும் தமிழே சைவத்தின் "உயிராக" (பஞ்சாக்ஷரம்) ஐந்தெழுத்து நமசிவாய, (சிவாயநம) எனப்படும். "பதத்தெழு மந்திரம் ஐந்தெழுத்து ஓதி" தேவாரம் (4340). 'பத மந்திரம் ஓதும் பரமனார்' தேவாரம் (5334). மனு ஏழ்கோடி என்பானோன்று வைத்த பதம் - திருமந்திரம் (2184). "வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்" திருமூலர் வடமொழியில் உள்ள "மறை" யாவருக்கும் பொது நூல் 'ஆகமங்கள்' அச்சமயத்தார்கே உரிய சிறப்பு நூல் - திருமூலர் (பத்தாம் திருமுறை).

சமய குரவரில் அர்ச்சகர் தான், சுந்தரர் பாடிய தமிழையும் கந்த புராணம் இயற்றிய கச்சியப்பசிவாச்சாரியார் மற்றும் அருணகிரிநாதர் அருளிய திருப்புகழிலும் தமிழையும், வடமொழியையும் சிறப்பித்து போற்றவில்லையா? சைவ சித்தாந்த நூல் எழுதிய அருள் நந்தி சிவாச்சாரியார் முதலான சந்தானச்சாரியார்கள் வடமொழியை தமிழாக்கம் செய்து சிறப்பித்துள்ளனர்.

தருமைபாதின வெளியீடு எண் 796 திருமந்திர மாலை நூலில் சிவகாமம், வேதம் பற்றி திருமூலர் சொன்ன விளக்கத்தினை பாராட்டுரை எழுதிய ஒய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி திரு. சதாசிவம் அவர்கள் சொன்ன குறிப்பை கவனித்தால் வடமொழியின் பெருமை புரியும்.

கல்வி அமைச்சர் ஆகிய பேராசிரியர் அவர்கள் "மறைமலைஅடிகள்" எழுதிய தனது திருக்கோயில்களும் போலி சைவர்களும் என்ற நூலில் அந்தணர், ஆதிசைவசிவாச்சாரியர்கள் யார் என்பதை தெளிவுபடுத்தி உள்ளதை படித்திருக்கக்கூடும் என எண்ணுகிறேன். தமிழக அரசு இந்து அறநிலையத்துறை செய்யவேண்டிய கடமையை இன்னும் அர்ச்சகர்கள்தான் தன் சுயநலம் கருதாது கிராமப்புற திருமுறை தலங்களை பாதுகாக்கின்றனர் என காஞ்சிபுரம் ஸ்ரீ

சங்கரர் மடம் "இந்து சமயமன்ற வெளியீடு திருமுறை தலங்கள்" என்ற நூலில் திரு. பு.மா. ஜெயசெந்தில்நாதன் தனது அனுபவத்தை நேரில் கண்டு நூலில் பிற்சேர்க்கை பகுதியில் எழுதியுள்ளார்.

சமய வழிபாட்டு முறைகளில் 36 அங்கங்கள் உள்ளன. அதில் 26வது பிரிவுதான் அர்ச்சனை ஓதப்படுகிறது. நஹ என்ற பதம் தவிர ஏனைய மந்திரங்கள் நடைமுறையில் உள்ளதை தெளிவுப்படுத்த வேண்டியது அரசின் கடமை.

திருமுறை ஆசிரியர்கள் சொன்ன போற்றி அகவல் தமிழ் அர்ச்சனை தவிர ஏனையவற்றை ஓதுவது மன்னர்கள் காலத்திலிருந்து வழக்கத்தில் இல்லை. (கடுக்காயின் குணமறிந்த வைத்தியன் அதனை உண்டாலும், குணமறியாதவன் உண்டாலும் ஒரே பலனைத்தான் தரும்) அதுபோல வடசொல்லில் உள்ள மந்திரங்களை புரியவில்லை என்றாலும் புரிந்தாலும் இறைவன் அருள்கிட்டும் என ஆன்மீக மக்கள் அறிந்துள்ளனர். லலிதா சகஸ்ரநாமம், விஷ்ணு சகஸ்ரநாமம் போன்ற வடசொல்லில் தொனி (ஒலி) மாறாமல் "லிப்கோ" பதிப்பகம் தமிழாக்கம் செய்துள்ளதில் அர்ச்சகர்களைபோல் சிறப்பாக சொல்லும் அளவு தமிழ்நாட்டு மக்கள் ஆன்மீகத்தை தெரிந்து வைத்துள்ளனர் என அறியவும். வடமொழியாகிய சமய வழிபாட்டு முறையை மாற்றக்கூடாது என உணர்ந்து தமிழக அரசு ஆகம கல்லூரிகளை அமைத்துள்ளது என்பதை அமைச்சரும் அறிந்ததே.

"உதய சூரியன்" என்ற வடசொல்லை தூய தமிழில் "ஏழுஞாயிறு" என்று தமிழ்ப்பற்றினால் மாற்றம் செய்தால் நமது தமிழ்மக்களுக்கு விவரம் புரியுமா? உணர்வார்களா? அதுபோல ஆலய வழிபாட்டு முறையை மாற்றம் செய்வது முறையல்ல. ஹிந்து கலாச்சாரத்தையும் வடமொழியின் அருமை அறிந்து வெளிநாடான மலேசியா, சிங்கப்பூர், லண்டன், அமெரிக்கா, அந்தமான், கனடா போன்ற இடங்களில் நமது அர்ச்சகர்கள் தனது குலத் தொண்டினை செம்மையாக செய்து வடமொழிக்கும், செந்தமிழுக்கும், தமிழ் நாட்டிற்கும் பெருமை சேர்த்துக் கொண்டிருப்பதை அமைச்சர்களும் இந்து அறநிலையத்துறை அறிஞர்களும், அதிகாரிகளும் நன்கு அறிய வேண்டும். திருமுறைகளில் ஓதிய தமிழ்ச் சொல் அர்ச்சகர்களுக்கு விரோதமில்லை திருமுறைகளில் ஓதிய போற்றி அகவல் தவிர ஏனையவற்றை மரலை மீறி

மாற்றலாமா இலங்கை ஆறுமுகநாவலர் காலத்தில் இராமலிங்க அடிகள் எழுதிய திருவருட்பாவை திருமுறைகளில் சேர்த்து ஓதப்பட நீதிமன்றத்தில் அனுமதிக்கப்படவில்லை. அப்படியிருக்க நினைத்தப்படியெல்லாம் கோடி அர்ச்சனைக்காக புதுக்கவிதையால் வழிபாட்டு முறையை காலத்துக்கு ஏற்றார்போல மாற்றம் செய்யலாமா? ஆன்மீக சமய நெறிமுறையில் அரசு தலையீட்டு குழப்பம் செய்யலாமா?

ஆலயத்திற்கு, இருகரங்களான தமிழ் திருமுறை, வேத சிவகாமங்கள் உலகில் உள்ள அனைத்து சிவ ஆலயங்களிலும் முறையாக ஓதப்பட வேண்டியும் எதிர்காலத்தில் அழித்துவிடாமல் இருக்க நமது அரசு பாதுகாக்க வேண்டும்.

தருமபுர ஆதீனத்தில், இன்றும், வேதசிவகாம பாடசாலை, திருமுறை பாடசாலைகளில் திறமையான ஆசிரியர்களை கொண்டு, ஐந்து ஆண்டுகள், இலவசமாக தங்க இட வசதியும், உணவும் அவர்களே அளித்து நல்ல மாணவர்களை ஆலய பணிக்கு பயிற்சி அளித்து, சான்றிதழ் வழங்கி வருவதை அரசு அறிந்தது தான். இதுபோன்ற பாடசாலைகள் பழனி, அல்லூர், திருச்சி, வழுவூர் இன்னும் சைவ பற்றுள்ள தனவந்தர்கள் மூலம் பயிற்சி அளிக்கப்படுகின்றன: இதனை கல்வி அமைச்சரும், அரசாங்கமும் அறிந்து அதற்கு ஊக்கமும் இன்னும் சிறப்பாக நடத்த அரசு உதவியும் செய்து "இந்து அறநிலையை" மேன்மைபடுத்த வேண்டியது அரசின் கடமை. இறைவன் அருளால் நமது இந்து சமய தர்மம் காக்கப்பட திருக்கடையூர் அபிராமி அமிர்தகடேச பெருமானை இறைஞ்சுகிறேன்.

வாழ்க!

மேன்மை பொருந்திய சைவநீதி விளங்குக! உலகெலாம்!

இவன்,
என். முத்துக்குருக்கள்,
ஆகமப் பிரிவினர், திருக்கடையூர்.

வருந்துகிறோம்

சிவகங்கை மாவட்டம் அறியாண்டிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆ. பம்பையன் பூஜாரி அவர்கள், சென்ற 15.11.97 அன்று சிவபதவி அடைந்தார்.

அன்னாரின் குடும்பத்தினருக்குப் பேரவையின் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஜெருசலமும் அயோத்தியும்: ஒரு ஆய்வு

ஆங்கில மூலம்: சுஹைல் சித்திக்

தமிழில்: சி. கனகராஜன்

பாபர் மசூதி பிரச்சனையும், அல் அக்ஸா மசூதி பிரச்சனையும் வேறுபட்டவை என்று அண்மையில் இந்தியாவுக்கு வருகை புரிந்த கானா - இ - காபா இமாம் முகமதுபின் அப்துல்லா அல் சுபய்யல் கூறியிருக்கிறார். அயோத்தியை மலைக் கோயிலுடன் சம்பந்தப்படுத்தி முஸ்லிம் பிரமுகர் ஒருவர் அதுவும் கானா - இ - காபா இப்படிக் கூறுவது முதல் தடவையாகும்.

அல் அக்ஸா மசூதியிலிருந்து முஸ்லிம்களை கட்டாயமாக வெளியேற்றிவிட்டு யூதர்கள் அதனைக் கைப்பற்றிக் கொண்டார்கள் என்றும் அவர் கூறியிருக்கிறார். அல் அக்ஸா மசூதியை யூதர்கள் பிடியிலிருந்து விடுவிக்க முன்வருமாறு அவர் இந்திய முஸ்லிம்களுக்கு அழைப்பு விடுத்தார்.

இந்த சந்தர்பத்தில் ஜெருசலத்திற்கும் அயோத்திக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஜெருசலத்தில் யூதர்கள் ஆலயத்தை (மலைக் கோயில்) மீண்டும் கட்ட விரும்புகிறார்கள். கி.பி. முதல் நூற்றாண்டில் ரோமானியர்களால் அழிக்கப்பட்ட ஆலயத்தை அவர்கள் மீண்டும் கட்ட விரும்புகிறார்கள். ஆனால் ராமஜன்ம பூமியில் தேசியவாதிகள் அனுபவித்து வரும் இன்னல்களை அவர்களும் அனுபவித்து வருகிறார்கள். இரு இடங்களிலும் மசூதியும், முஸ்லிம்கள் அல்லாதவர்களும் சம்பநதப்பட்டிருப்பது ஒரு ஒற்றுமையாகும்.

முகமது நபி இறக்கையுடன் குதிரையில் ஆகாயத்தில் பறந்து பாதம் பதித்த பாறையில், அல் அக்ஸா மசூதி கட்டப்பட்டிருப்பதாக முஸ்லிம்கள் நம்புகின்றனர்.

இஸ்ரேலும், இந்தியாவும் தாமாக விரும்பி மதச்சார்பற்ற அரசைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றன. இரு நாடுகளும் விடுதலைக்கு முன் ஆங்கிலேயர்களிடம்

அடிமைப்பட்டிருந்தன. இரு நாடுகளும் விடுதலை அடைகிற நேரத்தில் பிரிவினையைச் சந்தித்தன. அவை மதச்சார்பற்ற நாடாகவும் இஸ்லாமிய நாடாகவும் பிரிக்கப்பட்டன. பிரிவினை ஏற்பட்டவுடன் பக்கத்து நாடான முஸ்லிம் நாடு மதச்சார்பற்ற நாட்டின்மீது ஆக்கிரமிக்கத் தொடங்கியது. இருநாடுகளிலும் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழ்ந்து வருகின்றனர்.

ஒரு தேவதூதர் வரும்போதுதான் ஜெருசலம் கோயில் கட்டப்படும் என்பது யூதர்களின் மத நம்பிக்கை. அயோத்தியில் அத்தகைய நம்பிக்கை எதுவும் இல்லை.

ஜெருசலத்தில் பிரச்சனைக்குரிய பகுதி சம்பந்தப்பட்ட இருவருக்கும் புனிதத் தலமாக உள்ளது. அயோத்தியில் ஹிந்துக்களின் மனதைப் புண்படுத்தவே பாபரி கட்டிடத்தை முஸ்லீம்கள் கட்டினர். அங்கு முஸ்லிம்கல் மதரீதியான முக்கியத்துவம் எதுவும் இல்லை. ஆனால் ஜெருசலத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன் யூதர்களின் இரண்டாவது ஆலயத்தை ரோமானியர்கள் அழித்த இடத்தில் காலிமனையில், வீணாகக் கிடக்கும் நிலப்பரப்பில் முஸ்லிம்கள் மசூதியைக் கட்டினர்.

ஆனால் அயோத்தியில் அந்நிய ஆக்கிரமிப்பாளர்கள் படையெடுத்தபோது அங்கு மசூதிக்கட்ட முயற்சிப்பதற்கு முன்னதாக தாமே ஆலயத்தை அழித்திருக்கின்றனர்.

முக்கியமான வேறுபாடு யாதெனில் ஜெருசலத்தில் இரு தரப்பினருக்கும் புனிதமான இடத்தை ஒரு மதத்தினர் மட்டும் பயன்படுத்தி வருகின்றனர். முஸ்லிம் வெறியர்கள் அந்த இடம் தமக்கு சொந்தமாக இருக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். அயோத்தியிலும் இதே சூழ்நிலைதான் இருக்கிறது, ஜெருசலத்தில் தற்போது இருப்பது முஸ்லிம்கள். அயோத்தியில் இப்போது இருப்பவர்கள் முஸ்லிம் அல்லாதவர்கள். ஜெருசலத்தில் இருப்பவர்கள் ஆலயத்தை புனிதமாகக் கருதுவோர். அயோத்தியில் இருப்பவர்கள் முஸ்லிம் அடிப்படைவாதிகள் அல்ல, முஸ்லிம் என்ற போர்வையில் உள்ள - பாபிரி மசூதி கமிட்டி பெயரில் செயல்படும் அரசியல்வாதிகள்.

இஸ்ரேல் அரசு. தமது நாட்டு மக்களுக்கு வழிபாட்டு சுதந்திரம் வழங்கியிருக்கிறது. யூதர்களும், கிறித்தவர்களும், முஸ்லிம்களும் இந்த வழிபாட்டு சுதந்திரத்தை அனுபவித்து வருகிறார்கள். (முன்பு இருந்த முஸ்லிம் அரசு பொதுவான புனிதத் தலங்களுக்கு யூதர்களும், கிறித்தவர்களும் செல்லத் தடை விதித்திருக்கிறது). இப்போதுள்ள நிலையற்ற யூத வெறியர்கள் எழுப்பும் குரலுக்கு அரசு செவிசாய்க்கவில்லை.

மாறாக, இந்தியாவில் அடுத்தடுத்து வந்த அரசுகள் மதசார்பற்ற தன்மையைக் கடைபிடித்து பாராபட்சமின்றி நடந்து கொள்ளவில்லை. இப்போது வழிபாடு நடத்திவரும் மதத்தினரிடமிருந்து அந்த இடத்தைப் பறிக்க அரசியல்வாதிகள் போடும் கூக்கூரலுக்கு அரசு செவிசாய்க்கிறது. 1949-லிருந்து அயோத்தியில் ஹிந்துக்கள் வழிபாடு நடத்தி வருகிறார்கள். உண்மை நிலை இப்படியிருக்க, ஹிந்துக்கள் பாபிரி மசூதியின் குரலுக்கு செவிசாய்க்க வேண்டும் அல்லது அதுனுடன் சமரசமாகப் போகவேண்டும் என்று வற்புறுத்துகிறது.

1990 குளிர்காலத்தில் இரு இடங்களிலும் ரத்தக்களறி ஏற்பட்டது. போலிஸின் குண்டுகள் மக்களைத் துளைத்தெடுத்தன. ஜெருசலத்தில் போலிஸார் 20 பேர்களை கொன்றனர். இடிக்கப்பட்ட மலைக் கோயிலில் மிஞ்சியிருக்கும் சுவரை நோக்கி வழிபாடு செய்து கொண்டிருந்த யூதர்கள் மீது போலிஸ் கற்களை எறிந்தது. அயோத்தியில் நிராயுதபாணியாக - ராம் பஜனை செய்து கொண்டிருந்த பக்தர்களை போலிஸார் கொன்று குவித்தனர்.

இந்த சம்பவங்களின் ஒற்றுமையில் ஒரு வேற்றுமையும் இருக்கிறது. ஜெருசலம் துப்பாக்கி சூட்டைக் கண்டித்து இஸ்ரேல் அரசுக்கு எதிராக ஐ.நா.வில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. ஆனால் அயோத்தி துப்பாக்கிச் சூடு குறித்து யாரும் கவலைப்படவில்லை. மனித உரிமைக் குரல் கொடுப்பதைத் தொழிலாகக் கொண்டிருப்பவர்கள் கூட இதுபற்றி எதுவும் பேசவில்லை.

கானா - இ - காபா இமாம் அண்மையில் இந்தியா வந்திருந்தபோது அல் அக்ஸா மசூதியை விடுவிக்க இந்தியா முஸ்லிம்கள் முன்வரவேண்டும் என்று கூறியிருப்பது சரிதான். அல் அக்ஸா மசூதியை விடுவிக்க

வேண்டியது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் மதரீதியான கடமையாகும். ஆனால் கானா - இ - காபா இமாம் இரட்டைக் கொள்கையைக் கடைப்பிடிக்கக் கூடாது என இந்திய முஸ்லிம்கள் அவருக்கு எச்சரிக்கை விடுப்பார்கள். அல் அக்ஸா மசூதியை விடுவிக்க அறைகூவல் விடுக்கும் இமாம், ராமஜன்ம பூமியை விடுவிக்கவும் அறைகூவல் விடுக்க வேண்டும்.

ஜெருசலத்தில் முகமது நபி ஆகாயத்தில் வந்து பாறையில் பாதம் பதித்ததாகச் சொல்லும் முஸ்லிம்கள், அதற்கு முன் அங்கு யூதர்கள் கோயில்கட்டி வழிபட்டதை ஒப்புக் கொள்ள வேண்டும். ஆனால் அதை மறந்து முஸ்லிம்களின் உணர்ச்சி, மதநம்பிக்கைக்கு மதிப்புக் கொடுத்தால் ஹிந்துக்கள் தமது புனிதத்தலங்கள் மற்றும் அதைச் சுற்றியுள்ள இடங்கள் மீது வைத்திருக்கும் மதிப்பு, உணர்வு, மதநம்பிக்கையும் மதிக்க வேண்டும். பாலஸ்தீனிய முஸ்லிம்களின் மத உணர்வையும் இந்திய ஹிந்துக்களின் மத உணர்வுகளையும் சமமாக மதிக்காவிட்டால், அவர்கள் மத அடிப்படையில் பாரபட்சமாக நடந்து ொள்ளுவதாகவே கருதப்படும்.

இறுதியாக, பரபிரி மசூதி என்று சொல்லப்படும் இடத்தை நினைவுக்கெட்டாத காலம் முதல் ராம பக்தர்கள் ராமஜன்ம பூமி எனப் போற்றி வழிபாடு நடத்தி வருகிறார்கள். அது ராமர் பிறந்த இடம் என அவர்கள் நம்புகிறார்கள்.

1990 அக்டோபர் 8ல் அல் அக்ஸா மசூதியின் கும்பம் (Dome) தகர்க்கபட்டபோது முகமது நபி விண்ணில் பறந்து வந்து பாறையில் பாதம் பதித்த இடத்தில் அல் அக்ஸா மசூதி கட்டப்பட்டது என்று முஸ்லிம்கள் கூறியதை எவரும் எதிர்க்கவில்லை. இதற்காக விசாரணை நடத்துமாறும் யாரும் கோரவில்லை. முகமது பறந்து வந்திருக்க முடியும், இறக்கையுள்ள குதிரையில் அவர் பறந்து வந்தார் என்பது உண்மையாக இருக்க முடியுமா என்றெல்லாம் யாரும் கேள்வி எழுப்பவில்லை. இது முஸ்லிம்களின் மத நம்பிக்கை என்பதால் அதை மதித்தனர். ஆனால் ஹிந்துக்கள் மட்டும் தமது புனிதத் தலத்தின் புனிதத்தன்மை பற்றி ஐயத்திற்கிடமின்றி நிருபிக்க வேண்டும் என கேள்வி எழுப்புவது ஏன்?

(நன்றி: ஆர்கனைசர், 28-12-97)

நமது சமூகம்

காஞ்சி முனிவரின் அருள் மொழிகள்

வெளிக் காரியங்களில் எத்தனை வேற்றுமை இருந்தாலும் இருதயத்தில் அன்பு இருந்தால் தேசத்தில் பரம சாந்தமே இருக்கும். யுக யுகாந்தரமாக நம் தேசத்தில் அப்படித்தான் சமூகம் சாந்தமாக இருந்திருக்கிறது. அவரவரும் சுயநலனை மட்டும் எண்ணாமல், சகல ஜனங்களுக்காகவும் நாம் இந்தக் கர்மத்தைச் செய்கிறோம் என்ற மனோபாவத்துடன் செய்தால் ஏற்றத் தாழ்வே இல்லை. என்ன விபரீதம் ஏற்பட்டாலும் சாமானிய தர்மங்களை அனைவரும், விஷேச தர்மங்களை அவரவரும் கூடியவரையில் ரக்ஷித்து வரவேண்டும்.



சமுதாய வாழ்வுக்குப் பல காரியங்கள் நடந்தாக வேண்டியிருக்கிறது. புத்தியினால் செய்கின்ற காரியங்கள், சரீரத்தால் செய்கின்ற காரியங்கள் - இவற்றில் பலபல தினுசுகள் - இத்தனையும் ஜன சமூகம் சுபிட்சமாக இருப்பதற்கு அவசியமாக இருக்கின்றன. இதில் ஒரு தொழில் உயர்வு, ஒரு தொழில் தாழ்வு என்று நினைத்தால் அது சுத்த தப்பு.

ஒவ்வொரு காரியத்தில் உள்ள ஜீவனும் கடைத்தேறுவதற்கு அநுகூலமாக வெவ்வேறு அநுஷ்டானங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. உடல் வருத்த உழைக்கிறவனை உபவாசம் இரு என்றால் அவனால் முடியுமா? புத்தியினால் காரியங்களைச் செய்கிறவர்களுக்குச் சரீர போஷனம் அவ்வளவு அவசியமில்லை. அவர்கள் சரீராபிமானம் நீங்கவே அதிக அநுஷ்டானங்கள் வைத்திருக்கிறது. காரியங்களைப் பொறுத்தே அநுஷ்டானங்கள் இருக்கின்றன என்று புரிந்துகொண்டால் சண்டைக்கு இடமே இல்லை.

சரளா வெங்கடேஸ்வரன்



ராகம் கல்யாணி

தாளம் ஆதி

பல்லவி

|| கண்ணன் வழி ஒரே வழி| என்று பணி| மனமே||

|| கண்ணனை ஒரு கணம்| மறவாதே| மனமே||

சமஷ்டிய சரணம்

|| எது நிஜம் எது நிஜம்| கண்ணன் நிஜம்|

| நன்மை நிஜம்||

|| கண்ணன் மனம் வைத்தால் எல்லாம்|

| நிஜமே| நிஜமே||

|| இரவிற்கு பின் பகல்| இருட்டிற்க்கு| பின் ஒளி||

|| எல்லா வற்றிற்க்கும் பின்| இறைவன்| இறைவன்||

(கண்ணன்)

வருந்துகிறோம்

சிவகங்கை மாவட்டம் அறியாண்டிப்பட்டி -கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆ. பம்பையன் பூஜாரி அவர்கள், சென்ற 15.11.97 அன்று சிவபதவி அடைந்தார்.

அன்னாரின் குடும்பத்தினருக்குப் பேரவையின் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வேள்வி செய்யும் முறை



கோதண்டராம சர்மா

ஹோம குண்டம், சதுரமாக அமைக்கப்பட வேண்டும். சுத்தமான செங்கற்களை உபயோகிக்க வேண்டும்.

கீழே, மண்தரையாக இல்லாமல், சிமெண்ட் தளமாக இருந்தால், ஒரு அங்குல அளவுக்கு மண் போட்டுக் கொண்டால், தரையில் வெடிப்பு ஏற்படாது.


வேள்விக் குண்டத்தின் நீள அகலம், நமது தேவையைப் பொறுத்தது. எல்லா மக்களும் பங்கு பெற வேண்டும் என்பது நமது குறிக்கோள் ஆதலால், அதற்கேற்ப குண்டத்தை அமைக்க வேண்டும்.

சமதளத்தின் மேல், நான்கு அடுக்குகளாகச் செங்கல்லை வைத்தால் போதும். ஒரு சமயத்தில் ஆறுபேர்கள், குண்டத்தைச் சுற்றி உட்கார்ந்து கொண்டு ஆஹுதி செய்யலாம். பதினைந்து நிமிடங்களுக்குப் பின், அடுத்த குழுவினர் உட்கார்ந்து வேள்வி செய்யலாம்.

இடை இடையே, வரட்டி, சிறு குச்சிகளைப் போட்டு, அக்கினி அணையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்; அவ்வப்போது விசிறிவிட வேண்டும்; (வாயினால் ஊதக் கூடாது).

சதுரமாக, மூன்று செங்கல் நீள அகலத்துக்குக் குண்டம் அமைத்து, மேலே தண்ணீர் தெளித்து, கோலப் பொடியினால் இழைகள் போட்டு, எட்டுத்

திக்கிகளிலும் சந்தனம் குங்குமம் புஷ்பம் வைத்து அலங்கரிக்க வேண்டும்.



கிழக்கு மற்றும் வடக்கு நுனியாக, குண்டத்தின் நான்கு புறங்களிலும், பதினாறு தர்பைகள் வீதம் வைக்க வேண்டும். பிரதான ஆசாரியர், கிழக்கு நோக்கி உட்காருவதால், குண்டத்தின் தெற்கு-வடக்குப் புறங்களில் வைக்கப்படும் தர்பங்களின் நுனி, கிழக்கு நோக்கியும், கிழக்கு - மேற்குப் பக்கங்களில் போடப்படும் தர்பங்கள், வடக்கு நுனியாகவும் இருக்க வேண்டும்.

குண்டத்தின் கீழ்புறத்தில், கடஸ்தாபனம் செய்யவேண்டும்.

வடக்கு நுனியாக வாழையிலையை வைத்து, அதன்மேல் அரிசியைப் பரப்பி, அதன்மேல், ஆடி அசையாதபடி, நூல் சுற்றப்பட்ட நீர் நிரம்பிய குடத்தை வைத்து, சந்தனம் குங்குமம் மாலை சார்த்தி, மாவிலைக் கொத்து வைத்து, சரியானபடி தேங்காயை வைக்க வேண்டும். தேங்காய், மேல் நோக்கியோ, கிழக்கு நோக்கியோ இருக்கலாம். கட வஸ்திரம் சார்த்த வேண்டும்.

குடத்தின் கழுத்துக்குக் கீழ்வரை நீர் இருந்தால் போதும். பச்ச கற்பூரம், ஏலக்காய் பொடி செய்து அதில் போடவும். ஓரிரண்டு எலுமிச்சம்பழம் போடலாம்.

இந்தக் குடத்தின் அருகே வடக்கு முகமாக ஆசாரியர் உட்கார்ந்து கொண்டு, பூஜைகளைச் செய்தபின்பு தான், வேள்வியைத் தொடங்க வேண்டும்.

பூஜைக்குத் தேவையான உபகரணங்கள், சாமான்களைச் சேகரித்து, கைக்கு எட்டும் தூரத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

குண்டத்தின் மேல்புறத்தில் ஆசாரியர் கிழக்கு நோக்கி உட்கார வேண்டுமாதலால், கடம், குண்டத்தின் கிழக்குப் பகுதியில் மேற்கு நோக்கியே அமைந்திருக்கும். கடத்தில், பூஜையை முடித்துக் கொண்ட பின்னர், ஆசாரியர் எழுந்து வந்து, குண்டத்தின் மேலண்டை ஆசனத்தில் அமருவார்.

பூஜையின் முதல் சடங்கு, புண்யாஹவாசனம், (பூஜை செய்யும்

இடத்தில், மந்திரத்தால் புனிதமாக்கப்பட்ட நீர் தெளித்து சுத்தம் செய்து தெய்வீக அலைகளைப் பரப்புதல்).

அடுத்தது, மஞ்சள் பொடியில், பிள்ளையார் பூஜை.

அடுத்ததாக, சங்கல்பம், (இன்ன நோக்கத்துடன். வேள்வி நடத்தப்படுகிறது என்பதைச் சொல்லும் பகுதி).

ஸர்வலோக ரக்ஷகஸ்ய, அஸாத்யஸ் ஸாதகஸ்ய, பக்தவத்ஸலஸ்ய, சரணாகதானாம் அபய ப்ரதாயகஸ்ய, அயோத்யாபதி ஸ்ரீ ராமசந்த்ரஸ்ய ப்ரஸாத ஸித்தயர்த்தம்,

பாரதவர்ஷே ராமராஜ்ய ஸம்ஸ்த்தாபனார்த்தம்

கோ-வத நிஷேத த்வாரா, கோ ரக்ஷணார்த்தம், ஸமஸ்த தேவாலய நிர்வாஹார்த்தம், ஸாது கண பீடாதீஸ்வர மகா மண்டலேஸ் வராதீனாம் ஸ்வாதத்ர ஸமிதி ஸங்கடனார்த்தம் காசீ, மதுரா, அயோத்யா இத்யாதி தீர்த்த ஸ்தானேஷு ஸநாதன தர்மாவலம் பினாம் இச்சானுஸாரேண பவ்ய மந்திர நிர்மாணார்த்தம்,

பாரத வர்ஷாக்ய புண்யபூமௌ ஸர்வதா, ஸர்வத்ர ஸநாதனதர்ம வைரீணாம், துஷ்ப்ரசார த்வாரா க்ரியமாண மதாந்தர ப்ரயத்ன தமனார்த்தம், யதா சக்தி, யதா மதி, ஸ்ரீ ராம சந்திர மூல மந்த்ர பூஜா ஹவனாக்ய மங்கள கர்ம கரிஷ்யாம:

அனைத்துலகங்களையும் காப்பாற்றுகிறவரும், செயற்கரிய செயல்களை செய்பவும், அடியார்களிடம் அன்பு செலுத்துபவும், அடைக்கலம் புகுந்தவர்களைக் காப்பாற்றுபவருமான அயோத்தி நகரமாவேந்தர் ஸ்ரீ ராமனுடைய அருள் கிடைக்கும் பெருட்டும்

பாரத நாட்டில் ராமராஜ்யம் அமைக்கப்பட வேண்டும் என்பதற்காகவும்

பசுக்கொலையைத் தடை செய்வதன் மூலம் ஆவினத்தைக் காப்பாற்றும் பொருட்டும், எல்லா திருக்கோவில்களின் நிர்வாகத்துக்காக, ஆன்றோர்-சான்றோர் அடங்கிய தனித்தியங்கும் வாரியம் அமைக்கப்பட வேண்டியும்

காசி, மதுரா, அயோத்தி முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களில் சனாதன தர்மத்தை அனுஷ்டித்து வருவபர்களின் விருப்பத்திற்கேற்ற முறையில் கோவில் கட்ட வேண்டியும்

பாரதவர்ஷம் என்ற புண்ணிய பூமியில், சனாதன தர்ம விரோதிகளால்

செய்யப்படுட்டு வரும் பொய்ப் பிரசாரத்தை நிறுத்துவதன் மூலம் மதமாற்றத்தைத் தடுக்கவும், எங்களால் இயன்ற முறஜயில் வேள்வி செய்கிறோம்.

தொடர்ந்து, மஞ்சள் பிள்ளையாரை வடக்கே நகர்த்தி வைத்துவிட்டு, பஞ்ச பாத்திரத்தில் கலச பூஜை. பின், முக்கிய கலசத்தில், சீதா லட்சுமண பரத சத்ருக்ன ஹனுமத் ஸமேத ஸ்ரீ ராமசந்திரனை ஆவாஹனம் செய்தல்.

அஸ்மின் கலச தீர்த்தே, ஸீதா லக்ஷ்மண பரத சத்ருக்ன ஹனுமத் ஸமேத ஸ்ரீராமசந்த்ரம் த்யாயாமி, ஆவாஹயாமி. (கலசத்தின் மேல் அட்சதை போடவும்).

ராம் ராமாய நமஹ - ஆஸனம் ஸமர்ப்பயாமி

ராம் ராமாய நமஹ - பாத்யம் ஸமர்ப்பயாமி (குடத்தின் அருகே சிறு கிண்ணத்தில் நீர் விடவும்)

ராம் ராமாய நமஹ - அர்க்யம் ஸமர்ப்பயாமி.

ராம் ராமாய நமஹ - ஆசமனீயம் ஸமர்ப்பயாமி.

ராம் ராமாய நமஹ - மதுபர்கம் ஸமர்ப்பயாமி.

ராம் ராமாய நமஹ - ஸ்நானம் ஸமர்ப்பயாமி

ராம் ராமாய நமஹ - வஸ்த்ரம் ஸமர்ப்பயாமி.

ராம் ராமாய நமஹ - கந்தான் தாரயாமி

ராம் ராமாய நமஹ - புஷ்பமாலாம் ஸமர்ப்பயாமி

ராம் ராமாய நமஹ - பூஜயாமி.

அர்ச்சனை

ராம் ராமாய நமஹ - தூபம் ஸமர்ப்பயாமி

ராம் ராமாய நமஹ - தீபம் ஸமர்ப்பயாமி

ராம் ராமாய நமஹ - நைவேத்யம் நிவேதயாமி

ராம் ராமாய நமஹ - கற்பூர நீராஜனம் தர்சயாமி.

அடுத்ததாக ஹோமம்.

ஹோம குண்டத்தின் மேல், பஞ்சபாத்திர நீரை உத்தரிணியால் எடுத்து தெளிக்கவும். (ஸீதாலக்ஷ்மண பரத சத்ருக்ன ஹனுமத் ஸமேத ஸ்ரீ ராமசந்த்ர பரப்ரம்மணே நமஹ என்று உச்சரித்தபடி)

(1. ஹோம அக்கினியில், வரட்டியை முழுசாகப் போடக்கூடாது; சிறிது

முறித்துத் தான் போட வேண்டும். 2. அரசங்குச்சி, புரசங்குச்சி மட்டுமே உபயோகப்படுத்தலாம். வேப்பங்குச்சி, ஆலங்குச்சி போன்றவை கூடாது. 3. நெய்யை உருக்கி வைத்துக் கொள்ள வேண்டும். 4. நெய்யை எடுத்து அக்னியில் வார்க்கும் சிறு மரக்கரண்டிக்கு தர்வி என்று பெயர். ஓர் அடி நீளமுள்ளதாக மரத்தில் ஒரு தர்வி செய்து வைத்துக் கொள்ளலாம். அல்லது, மாவிலையை ஒரு குச்சியில் கட்டிவைத்துக் கொள்ளலாம்.)

(குண்டத்தின் நடுவில் ஒரு வரட்டியில் நெருப்புத் தணலைப் போடவும். விறகுக் கரியிலிருந்து உண்டாகும் தணல் தான் உத்தமமானது. அது சௌகரியப்படாதபோது, கற்பூரத்தை ஏற்றி அக்னி உண்டு பண்ணிக் கொள்ளலாம். சிறு குச்சிகளை வைத்து, மெல்ல விசிறி, அக்னியை பலப்படுத்திக் கொள்ளவும்).

ரம் அக்னயே நமஹ (என்று சொல்லி, குண்ட அக்னியின் நடுவில் அட்சதை போடவும்)

இரு கைகளையும் கூப்பிக் கொண்டு பிரார்த்தனை செய்யவும்

அக்னிம் ப்ரஜ்வலிதம் வந்தே ஜாதவேதம் ஹுதாசனம் சுவர்ண வர்ணம் அமலம் ஸமித்தம் ஸர்வதோ முகம்.

பின், கிழக்கிலிருந்து ஆரம்பித்து, வலமாக, எட்டுத் திசைகளிலும், குண்டத்தின் மேல்புறத்தில்,

இந்த்ராய நமஹ
அக்னயே நமஹ
யமாய நமஹ
நிர்ருதே நமஹ
வருணாய நமஹ
வாயவே நமஹ
ஸோமாய நமஹ
ஈசானாய நமஹ

-என்று, மலர்களால் அர்ச்சனை செய்யவும்.

அக்னியில்,
அக்னயே நமஹ
ஹுதவாஹாய நமஹ
தேவமுகாய நமஹ
ஜாதவேதஸே நமஹ
யக்ஞ புருஷாய நமஹ

-என்று, **அர்ச்சனை** செய்யவும்.

பின், பிரார்த்தனை-

அக்னே, இஹ ஆகச்ச. லோஹிதாக்ஷ, மம ஸர்வ கார்யாணி ஸாதய.

பின், தனக்கும் குண்டத்துக்கும் இடையில், எட்டு தர்பங்களை வடக்கு நுனியாகப் பரப்பி, அதன்மேல், நெய்ப் பாத்திரத்தை வைக்கவும். நெய்ப்

பாத்திரத்தை, தர்பங்களால் தொட்டுக் கொண்டு, 'ராம் ராமாய நமஹ' என்ற மூலமந்திரத்தைப் பதினாறு தடவை உச்சரித்து புனிதப்படுத்தவும். (தர்பத்தை வேறு இடத்தில் வைத்துவிடலாம்).

அக்னியில் ஸ்ரீ இராமபிரானை, எழுந்தருளும்படி வேண்டிக் கொள்ளுதல் - ஆவாஹனம்.

ராம் ராமாய நமஹ- அஸ்மின் அக்னௌ, சீதாலக்ஷ்மண பரத சத்ருக்ன ஹனுமத் ஸமேத ஸ்ரீ ராமசந்த்ரம் ஆவாஹயாமி,

ஹே ராமசந்த்ர, இஹ ஆகச்ச, இஹ

திஷ்ட்ட. மம பூஜாம் ஆஹுதிம் ச க்ருஹாண. (என்று பிராத்தனை.)

ஆஸனாதி உபசாரான் ஸமர்ப்பயாமி.

(அட்சதை போடவும்)

ராம் ராமாய நம: ஸ்வாஹா

ராமபத்ராய ஸ்வாஹா

ராமசந்த்ராய ஸ்வாஹா

வேதஸே ஸ்வாஹா

ரகுநாதாய ஸ்வாஹா

நாதாய ஸ்வாஹா

சீதாபதே ஸ்வாஹா

என்று, நெய்யினால் ஆகுதி செய்து. இரண்டு வாழைப் பழத்தைத் தட்டில் வைத்து நீட்டி, 'ஸ்ரீ ராமசந்த்ராய நமஹ கதலீபலம் நிவேதயாமி' என்று சொல்லி, வாழைப்பழங்களை நெய்யில் சிறிது நனைத்து, அக்னியில் போடவும்.

பின், சிறிதாக ஒரு தீபாராதனை.

தொடர்ந்து, எல்லோருமாக, ஆஹுதி செய்தல்.

ஸமித்து என்னும் அரசங்குச்சியை, நெய்யில் தோய்த்துத் தான் அக்னியில் போடவேண்டும். எனவே ஆஹுதி கொடுப்பதற்காக உட்கார்ந்துள்ள ஒவ்வொருவர் முன்புறமும், ஒரு கிண்ணத்தில், ஒரு கரண்டி அளவுக்கு நெய் வைத்துக் கொள்ள வேண்டும்.

முன்னதாகவே, அரசங்குச்சியை நூறு நூறாகக் கட்டி வைத்துக் கொள்ள வேண்டும். 'ராம் ராமாய நமஸ் ஸ்வாஹா' என்று, எல்லோரும் ஒரே குரலாக கூறிக்கொண்டு, 'ஸ்வாஹா' சொன்ன பிறகு ஒரு ஸமித்தை நெய்யில் தோய்த்து பணிவுடன் அக்னியில் போடவேண்டும்.

பிரதான ஆசாரியர் மட்டும், நெய்யினால் ஆஹுதி செய்வார். ஸமித்தைத் தவிர, சர்க்கரைப் பொங்கல், நெய் கலந்த வெள்ளைச் சோறு, நெல்பொறி, பலவகைப் பழங்களைச் சிறு துண்டங்களாக நறுக்கி வைத்த பழத் துணுக்குகள், தாமரை மலர் போன்றவைகளையும் ஆஹுதியாகப்

போடலாம்.

முன்னரே நிச்சயித்த காலம் வரை, அணி அணியாக வேள்வி செய்து வரலாம். எதிர்பாராத கூட்டம் வந்துவிட்டால், ஐந்து நிமிஷத்துக்கு ஓர் அணி என்று வைத்துக் கொள்ளலாம்.

வேள்வி செய்ய வருபவர்கள், நீராடி, வெண்மையான உடை தரித்து, அவரவர் மரபுப்படி நெற்றிக்குத் திலகம் வைத்துக் கொண்டு வர வேண்டும். வர்ண வேட்டிகளும் கைலிகளும் அனுமதிக்கப்பட மாட்டா.

நிறைவாக, ஒரு தட்டில், தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு சந்தனம் குங்குமம் பழத்துண்டுகள் புஷ்பம் நெற்பொறி முதலியன நிறைய வைத்து, எழுந்து நின்று,

ஆபதாம் அபஹர்தாரம் தாதாரம் ஸர்வஸம்பதாம்; லோகாபிராமம் ஸ்ரீராமம் பூயோ பூயோ நமாம்யஹம். ராஜர்ஷி வம்ச திலக ராமசந்த்ர நமோஸ்து தே.

ஸீதாலக்ஷ்மண பரத சத்ருக்ன ஹனுமத் ஸமேத ஸ்ரீ ராமசந்த்ர ஸ்வாமினே நமஹ, ஸங்கல்பித கார்ய ஸித்த்யார்த்தம், அதர்மிணாம் நிக்ரஹ பூர்வகம் தர்மிஷ்டானாம் பரிரக்ஷணார்த்தம், பாரத வர்ஷே அதி சீக்ரமேவ தேசபக்த நேத்ருணாம் சாஸனாதிகார ப்ராப்த்யர்த்தம்,

பூர்ணாஹுதிம் ஜுஹோமி ராம் ராமாய நமஸ் ஸ்வாஹா

-என்றபடி, முழுவதுமாக அக்னியில் போடவும்.

பின், சிறிது நிவேதனம் செய்து, கற்பூரம் காட்டவும்.

அடுத்து, ஸ்ரீ ராம சந்த்ராய நமஹ சத்ர - சாமராதி ஸர்வோபசாரான் ஸமர்ப்பயாமி.

பின், அக்னயே நமஹ என்றபடி ஒரு ஸமித்தை அக்னியில் வைத்து விட்டு இரு கையையும் கூப்பி வணங்கி, எழுந்து நமஸ்காரம் செய்யவும்.

பின், இருகைகளிலும் பூ வைத்துக் கொண்டு, அக்னி குண்டத்தை வலமாக மூன்று தடவை சுற்றி, அதை கும்பத்தில் போடவும்.

அடுத்து, எல்லா நைவேத்தியப் பொருள்களையும் கும்பத்திலுள்ள இராமனுக்கு நிவேதனம் செய்யவும். பின் கற்பூர ஆர்த்தி.

பின், சிறிது புஷ்பம் எடுத்து, 'அஸ்மின் கும்பே ஆவாஹிதம் ஸ்ரீ ராமசந்த்ரம் யதாஸ்தானம் பிரதிஷ்டாபயாமி' என்றபடி, கும்பத்தில் போட்டு,

நமஸ்கரிக்கவும்.

அடுத்து ஆசமனம்.

ஓம் தத் ஸத். ப்ரம்மார்ப்பணமஸ்து என்று சொல்லி, ஓர் உத்திரணி தண்ணீரை வலதுகை விரல் நுனி வழியாகத் தரையில் விடவும்.

பின், கும்ப நீர் விநியோகம். தர்பைச் சாந்து விநியோகம், பிரஸாத விநியோகம்.

---- ❖ --- ❖ ---

ஸ்ரீ ராமர் 108 அர்ச்சனை

ஓம் ஸ்ரீ ராமாய நம:
ராமபத்ராய "
ராமசந்த்ராய "
சாஸ்வதே "
ராஜீவ லோசனாய "
ஸ்ரீமதே "
ராஜேந்த்ராய "
ரகுபுங்கவாய "
ஜானகீவல்லபாய "
ஜனார்தனாய "
ஸத்ய விக்ரமாய "
ஸத்ய வ்ரதாய "
கௌஸலேயாய "
கர த்வம்ஸினே "
தாடகாந்தகாய "
வேதாந்த ஸாராய "
வேதாத்மனே நம:
த்ரிமூர்த்தயே "
த்ரிகுணாய "
த்ரி விக்ரமாய "
புண்ய சாரித்ராய "
த்ரிலோக ரக்ஷகாய "
தண்டகாரண்ய வாஸினே "
வர ப்ரதாய "
ஜித க்ரோதாய "
ஜகத்குருவே "
சுமித்ரா புத்ர ஸேவிதாய "
மகா தேவாய "
மகா புஜாய "
ஸௌம்யாய "
ஸர்வதேவ ஸ்துதாய "
மஹா யோகினே "
பரம புருஷாய "
ஆதி புருஷாய "
தயாஸாராய "
புருஷோத்தமாய "
மித பாஷிணே "
ராகவாய "
மாயா மானுஷவேஷாய "
மகாதேவ பூஜிதாய "
ஸர்வ தீர்த்தாய "
ஹரயே "
சுந்தராய "
சூராய "
பீத வாஸஸே "
தனுர்தராய "
யக்ஞபதயே "
யஜமானாய "

யக்ஞபல ப்ரதாய நம:
பரமாத்மனே "
பரப்ரும்மணே "
சச்சிதானந்த ரூபாய "
பராகாசாய "
பராத்பராய "
ஸர்வ தேவாத்மகாய "
ராவண ஹந்த்ரே "
ஹனுமத் ஸேவிதாய "
அஹல்யா சாப விமோசகாய "
சரணாகத ரக்ஷகாய "
குஹ ஸேவிதாய "
சரபங்க வந்திதாய "
தர்ம நிஷ்டாய "
தர்ம பரிபாலகாய "
தர்ம சாரித்ராய "
தர்ம ஸ்வரூபிணே "
அதர்ம நாசகாய "
முனி ரக்ஷகாய "
வைகுண்ட பதயே "
தசானன காலரூபிணே "
நித்ய ப்ரஸன்னாய "
ஸத்ய வாசே "
புண்டரீ காக்ஷாய "
ராஜாதிராஜாய "
முனிமண்டல பூஜிதாய "
தர்ப்ப சாயினே "
மாரீசவத பண்டிதாய "
அபய ப்ரதாய "
நிர்குணாய "
நாம வர்ஜிதாய "
ஸஹஸ்ர நாம்னே "

பஞ்சவடீ நிவாஸாய நம:
தைத்ய தமனாய "
வீர வராய "
தனுர் பங்காய "
மைதிலீ காந்தாய "
ஸ்வாமித்ர யக்ஞ ரக்ஷகாய "
தாடகாந்தகாய "
பித்ரு பக்தாய "
சுமித்ரா நந்தனாய "
சியாமளாய "
கிரீடினே "
அரவிந்த லோசனாய "
தபஸ்வினே "
தயா நிதயே "
தாசரதாய "
இந்த்ர ரதாரூடாய "
வானர ஸைனிகாய "
ஸேது க்ருதே "
லங்கா விநாசினே "
அச்யுதாய "
அனந்தாய "
கோவிந்தாய "
நாராயணாய "
மாதவாய "
விஷ்ணவே "
மதுஸூதனாய "

சீதா லக்ஷ்மண பரத சதருக்ன ஹனுமத் ஸமேத ஸ்ரீ ராமசந்த்ர பரப்ரம்மணே நம:

நானாவித பரிமள பத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி.

ராமர் அஷ்டோத்தர சத நாமங்கள்

ஓம் ஸ்ரீராமனே போற்றி
ஓம் சீதா ராமனே "
ஓம் அயோத்தியரசனே "
ஓம் அகல்யோத்தாரகனே "
ஓம் அனுமனையணைந்தவனே "
ஓம் அபபவரதனே "
ஓம் அடைக்கல ராமனே "
ஓம் அகந்தையழிப்பவனே "
ஓம் அன்பர்க் கெளியவனே "
ஓம் ஈகைஉருவனே "
ஓம் ஈடிலா வீரனே "
ஓம் உத்தமனே "
ஓம் உலகோர்க்குதாரணனே "
ஓம் ஏகபத்னி வ்ரதனே "
ஓம் எளிதில் இரங்குபவனே "
ஓம் கருநீல வண்ணனே "
ஓம் கருணாமூர்த்தியே "
ஓம் கல்யாண . ராமனே "
ஓம் கரைகாத்த ராமனே "
ஓம் கரத்வம்ஸனே "
ஓம் கபந்த மர்த்தனனே "
ஓம் கானகமேகியவனே "
ஓம் காகாசுர வதனனே "
ஓம் கிருக பாலகனே "
ஓம் கீர்த்தியளிப்பவனே "
ஓம் குக சோதரனே "
ஓம் குறை தீர்ப்பவனே "
ஓம் கோசலை மைந்தனே "
ஓம் கோதண்டபாணியே "
ஓம் சத்குணனே "
ஓம் சத்ருக்ன சோதரனே "
ஓம் சஞ்சீவி ராமனே "
ஓம் சந்தான ராமனே "
ஓம் சமரிலானே "
ஓம் சத்ய விரதனே "
ஓம் சம்மங்கிப் பிரியனே "
ஓம் சபரிக்கருளியவனே "
ஓம் சாந்த மூர்த்தியே "
ஓம் ஜானகி வல்லபனே "
ஓம் ஜனகன் மருகனே "
ஓம் ஜடாயுக் கருளியவனே "
ஓம் சித்திரைத் தோன்றலே "
ஓம் சிவபூஜைப் பிரியனே "
ஓம் சுந்தர ராமனே "
ஓம் சுக்ரீவ நண்பனே "
ஓம் சூரிய குலனே "
ஓம் சோக நாசகனே "
ஓம் சேது பந்தனனே "
ஓம் சேவிக்க எளியனே "
ஓம் தர்ம ரக்ஷகனே "
ஓம் தருணத்தருள்வோனே "
ஓம் தாஸஸத்யனே "
ஓம் தாடகையைத் தடித்தவனே "
ஓம் தசரத புத்ரனே "
ஓம் தாரக நாமனே "
ஓம் த்ருட விரதனே "
ஓம் திவ்ய புருஷனே "
ஓம் நவமிச் சேயே "
ஓம் நவயௌவனனே "
ஓம் நித்ய சுந்தரனே "
ஓம் நின்றருள்வோனே "
ஓம் நிர்மலனே "
ஓம் நீள்கரனே "
ஓம் பரதப்ரியனே "
ஓம் பரமானந்தனே "
ஓம் பக்த வத்ஸலனே "
ஓம் பத்ராசனனே "
ஓம் பராக்கிரமனே "
ஓம் பட்டாபிராமனே "
ஓம் பித்ரு பக்தனே "

ஓம் புருஷோத்தமனே "
ஓம் புனர்வசு நக்ஷத்ரனே "
ஓம் பேரரசனே "
ஓம் பேறளிப்பவனே "
ஓம் மந்திர சாதகனே "
ஓம் மராமரம் துளைத்தவனே "
ஓம் மால் வடிவே "
ஓம் மாரீச மர்த்தனனே "
ஓம் மிதிலை மருகனே "
ஓம் மென் மொழியனே "
ஓம் யாகத்துதித்தவனே "
ஓம் யாகக் காவலனே "
ஓம் ரகுபதியே "
ஓம் ரவிகுல திலகனே "
ஓம் ரக்ஷிப்பவனே "
ஓம் ராக்ஷஸ நிக்ரஹனே "
ஓம் ராமபத்ரனே "
ஓம் ராஜாராமனே "
ஓம் ராவண மர்த்தனனே "
ஓம் ராமாயண நாயகனே "
ஓம் லக்ஷ்மண சோதரனே "
ஓம் லவகுசர் தாதையே "
ஓம் லக்ஷண புருஷனே "
ஓம் வசீகரனே "
ஓம் வசிஷ்ட சிஷ்யனே "
ஓம் வாழ்விப்பவனே "
ஓம் வாலி மர்த்தனனே "
ஓம் விராட வதனனே "
ஓம் விஸ்வாமித்ர சீடனே "
ஓம் வில்லொடித்தவனே "
ஓம் விபீஷணனுக்கருளியவனே "
ஓம் விரிநீள் கண்ணனே "
ஓம் வீராசனனே "
ஓம் ஜெய ராமனே "
ஓம் ஜெய ஜெய ராமனே "

அனுமன் அஷ்டோத்தர சத நாமங்கள்

ஓம் அனுமனே "
ஓம் அஞ்சனை புதல்வனே "
ஓம் அறக்காவலனே "
ஓம் அவதார புருஷனே "
ஓம் அறிஞனே "
ஓம் அடக்க வடிவே "
ஓம் அதிகாலைப் பிறந்தவனே "
ஓம் அசோகவனமெரித்தவனே "
ஓம் அர்ஜுனன்கொடியானவனே "
ஓம் அமாவாசையில் பிறந்தவனே "
ஓம் ஆனந்த வடிவனே "
ஓம் ஆரோக்கியமளிப்பவனே "
ஓம் இன்னல்பொடிப்பவனே "
ஓம் இகபர சுகமளிப்பவனே "
ஓம் இசை ஞானியே "
ஓம் இறை வடிவே "
ஓம் ஒப்பிலானே "
ஓம் ஓங்கி வளர்ந்தோனே "
ஓம் கதாயுதனே "
ஓம் கலக்கம் தீர்ப்பவனே "
ஓம் களங்கமிலானே "
ஓம் கர்மயோகியே "
ஓம் கட்டறுப்பவனே "
ஓம் கம்பத்தருள்வோனே "
ஓம் கடல் தாவியவனே "
ஓம் கரை சேர்ப்பவனே "
ஓம் கீதாபாஷ்யனே "
ஓம் கீர்த்தியளிப்பவனே "
ஓம் கூப்பிய கரனே "
ஓம் குறுகி நீண்டோனே "
ஓம் குண்டக்ரியராகனே "
ஓம் கௌண்டின்ய கோத்ரனே "
ஓம் சஞ்சீவி கொணர்ந்தவனே "
ஓம் சலியாவரம் அருள்வோனே "

ஓம் சிவபக்தனே "
ஓம் சிரஞ்சீவியே "
ஓம் சிந்தூரம் ஏற்பவனே "
ஓம் சீதாராம சேவகனே "
ஓம் சூரனே "
ஓம் சுக்ரீவக் காவலனே "
ஓம் சொல்நயனே "
ஓம் சூரிய சீடனே "
ஓம் சோர்விலானே "
ஓம் சோகநாசகனே "
ஓம் தவயோகியே "
ஓம் தத்வஞானியே "
ஓம் தயிரன்னப் பிரியனே "
ஓம் துளசியில் மகிழ்வோனே "
ஓம் தீதழிப்பவனே "
ஓம் தீயும் சுடானே "
ஓம் நரஹரியானந்தரானவனே "
ஓம் நாரத கர்வபங்கனே "
ஓம் நொடியில் அருள்வோனே "
ஓம் நொடித்தோர் வாழ்வே "
ஓம் பண்டிதனே "
ஓம் பஞ்சமுகனே "
ஓம் பக்திவடிவனே "
ஓம் பக்தரக்ஷகனே "
ஓம் பரதனைக் காத்தவனே "
ஓம் பக்தராமதாசரானவனே "
ஓம் பருதியைப் பிடித்தவனே "
ஓம் பயமேயறியானே "
ஓம் பகையழிப்பவனே "
ஓம் பவழமல்லிப் பிரியனே "
ஓம் பிரம்மச்சாரியே "
ஓம் பீம சோதரனே "
ஓம் புலனை வென்றவனே "
ஓம் புகழ் சேர்ப்பவனே "
ஓம் புண்ணியனே "
ஓம் பொட்டிட மகிழ்வோனே "
ஓம் மதிமந்திரியே "
ஓம் மனோவேகனே "
ஓம் மாவீரனே "
ஓம் மாருதியே "
ஓம் மார்கழியில் பிறந்தவனே "
ஓம் மணம் கூட்டுவிப்பவனே "
ஓம் மூலநக்ஷத்ரனே "
ஓம் மூப்பிலானே "
ஓம் ராமதாஸனே "
ஓம் ராமநாம தாஸனே "
ஓம் ராம தூதனே "
ஓம் ராம சோதரனே "
ஓம் ராமநாம ஸ்மரணனே "
ஓம் ராமநாமத்திருப்போனே "
ஓம் ராமனை அணைத்தவனே "
ஓம் ராமஜயம் அறிவித்தவனே "
ஓம் ராமாயண நாயகனே "
ஓம் ராமாயணப் பிரியனே "
ஓம் ராகமூல புருஷனே "
ஓம் ருத்ர வடிவே "
ஓம் லக்ஷ்ய புருஷனே "
ஓம் லக்ஷ்மணனைக் காத்தவனே "
ஓம் லங்கா தஹனனே "
ஓம் லங்கிணியை வென்றவனே "
ஓம் வஜ்ர தேகனே "
ஓம் வாயு குமாரனே "
ஓம் வடைமாலைப் பிரியனே "
ஓம் வணங்குவோர் வாழ்வே "
ஓம் விஷ்ணுஸ்வரூபனே "
ஓம் விளையாடும் வானரனே "
ஓம் விசுவ ரூபனே "
ஓம் வியாசராஜயர்க்கு அருளியவனே "
ஓம் வைராக்கியனே "
ஓம் வைகுண்டம் வெறுத்தவனே "
ஓம் வேதக் கடலே "
ஓம் வெண்ணையுண்டவனே "
ஓம் வெற்றிலைமாலை ஏற்பவனே "
ஓம் வெற்றியளிப்பவனே "

ராம காயத்ரீ

தாசரதசாய வித்மஹே ஸீதாவல்லபாய தீமஹி
தன்னோ ராம: ப்ரசோதயாத்.

சீதா காயத்ரீ

பூமிஜாயை வித்மஹே தயாரூபாயை தீமஹி|
தன்னோ ஜானகீ ப்ரசோதயாத்

அனுமார் காயத்ரீ

ஆஞ்ஜனேயாய வித்மஹே வாயுபுத்ராய தீமஹி
தன்னோ ஹனுமன் ப்ரசோதயாத்.

அக்னி காயத்ரி

ஓம் வைஸ்வாநராய வித்மஹே தேஜோரூபாய தீமஹி|
தன்னோ அக்னி: ப்ரசோதயாத்|

இசைக்குயிலுக்கு

"பாரத ரத்னா" விருது



பட்டங்களும் பதவிகளும் பலசமயங்களில் பெறுகின்ற நபரை கௌரவப்படுத்துகிறது. ஆனால் விதிவிலக்காக சில சமயங்களில் பெறுகின்ற நபர்கள், மூலமாக அவை பெருமிதப்படுத்தப் படுகின்றன. அந்த வகையில் கர்நாடக இசையுலகின் மாமேதை திருமதி எம்.எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களுக்கு கொடுக்கப் பட்டுள்ள பாரத ரத்னா விருது ஒரு தகுதிவாய்ந்த, சிறப்புமிக்க நபருக்கு கொடுக்கப்பட்டதன் மூலம் அந்த விருதுக்கு கௌரவம் கிட்டியுள்ளது.

சங்கீதத்துடன் தேசபக்தியும் அவரது ரத்தத்தில் கலந்திருந்ததால் காந்தி, நேரு போன்ற மாபெரும் தலைவர்களின் பாராட்டைப் பெற்றவர்

எம்.எஸ்.ஸின் இசையில் மயங்கிய சரோஜினி நாயுடு தனகுக்கு அளிக்கப்பட்ட இசைக்குயில் பட்டத்தை எம்.எஸ்.ஸுக்கு சமர்ப்பித்து கௌரவித்தார்.

இவரது 'மீரா பஜன்' பாடல்களில் தன்நிலை மறந்து உருகிப்போன மகாத்மா ஆனந்தக் கண்ணீர் விட்டு அழுதார்.

"நான் வெறும் பிரதமர் மட்டும்தான், ஆனால் எம்.எஸ்ஸோ இசை உலகின் ராணி" என்று தில்லியில் நடந்த விழாவில் புகழாரம் சூட்டினார் அப்போதைய பிரதமர் நேரு.

1966-ஆம் ஆண்டு ஐ.நா. பொதுச் சபையில் பாடி உலகப் புகழடைந்தார். இது தவிர இங்கிலாந்தில் நடந்த இந்திய விழாவிலும் சோவியத் ரஷ்யா உள்ளிட்ட வெளி நாடுகளிலும் இசை நிகழ்ச்சி நடத்தி சர்வதேச ரசிகர்களை தன் இசையால் மயங்கச் செய்தவர்.

இன்றுவரை அவரது இசைத் தொகுப்பு மூலம் கிடைக்கும் பணத்தை அறப்பணிகளில் செலவிட்டு வருகிறார்.

இசையுலகில் அவரால் பெறப்படாத பட்டங்கள் எவையுமே இல்லை என்று சொல்லும் அளவுக்கு அனைத்துப் பட்டங்களையும் வென்றவர், நடிப்பாற்றலிலும் தன்னால் சிறப்பாக வெளிப்படுத்தமுடியும் என்பதனை மீரா படம் மூலம் நிரூபணம் செய்தவர், எல்லோருக்கும் கலைமகள், திருமகள் இருவரின் அருட்கடாச்சம் ஒரே சமயத்தில் கிட்டுவதில்லை, அனால் எம்.எஸ். சுப்புலக்ஷ்மி விஷயத்தில் அதுவும் விதிவிலக்கு, தனது குரல்வளத்தால் பெற்ற அனைத்து பணத்தையும் ஏதாவது ஒரு தர்ம கார்யங்களுக்காகவே செலவிட்டுள்ளார். அவரின் இந்த உதவும் குணமும், தாராள மனதும் இன்று எவரிடமும் காணக்கிடைக்காதது. இவ்விருது இசைக்குயிலின் சாதனை மகுடத்தில் மற்றுமோர் கோகினூர் வைரம், என போற்றப்படுகிறது. நாமும் போற்றுவோம்.


❖ ❖ ❖



தைப்பொங்கல்

அ. ஜீவநாதன்

(நீலக்கடலின் ஓரத்தில் மெட்டு)




1. தையில் பொங்கல் திருநாளாம்
வையம் புகழும் ஒருநாளாம்
பொய்மை போக்கும் திருநாளாம்
புதுமை சேர்க்கும் ஒருநாளாம். (தை

2. மெய்யை வருத்தி உழைப்பவரின்
மேன்மை தன்னை கூறிடவே
செய்யும் தொழிலின் சிறப்பினையே
சீருடன் போற்றி வணங்கிடவே. (தை)

3. சிறியோர் முதலாய் பெரியோர் வரை
சிந்தையில் ஒன்று சேர்ந்து தினம்
வறியவர் யாரும் இல்லையென
வாழ்வில் என்றும் நலம்பெறவே. (தை)

4. நெல்லும் கரும்பும் நிறைந்திருக்க
நெய்யும் மஞ்சள் தேங்காயும்
சொல்லும் பொங்கல் பெருமைதனை
தெள்ளு தமிழில் பாடிடவே. (தை)



5. பாரத நாட்டின் பழம் பெருமை
பகன்றிடும் நமது பண்டிகையில்
யாவரும் இணைந்து மகிழ்ந்திடவே
தேவரும் மூவரும் அருள்புரிவார் (தை)

6. சாதிகள் சமயம் தனை மறந்து
சத்தியம் தன்னை நாம் நினைந்து
சோதியாம் இறைவன் பதம் பணிந்து
சுகமுடன் வாழ்வோம் மனமகிழ்ந்து (தை)

7. சூரியதேவன் முன்னிலையில்
சுற்றமுடன் பொங்கல் படைத்திடுவோம்
வாடிய கால்நடை வளம்பெறவே
வணங்கிடுவோம் நாம் நலம்பெறவே (தை).

முக்கிய பஞ்சாங்க குறிப்புகள்

ஈஸ்வர தை – மாசி

ஆங்கில தேதி	தமிழ் தேதி	கிழமை	திதி	நட்சத்திரம்	விசேஷங்கள்
31.1.98	தை 18	சனி	திருதியை	பூரட்டாதி	சுக்ல சதுர்த்தி
2.2.98	" 20	திங்கள்	ஷஷ்டி	ரேவதி	சுக்ல ஷஷ்டி
3.2.98	" 21	செவ்வாய்	ஸப்தமி	அச்வினி	ரத சப்தமி
4.2.98	" 22	புதன்	அஷ்டமி	பரணி	கிருத்திகை
5.2.98	" 23	வியாழன்	நவமி	க்ருத்திகை	க்ருத்திகை விரதம், பீஷ்மாஷ்டமி
7.2.98	" 25	சனி	ஏகாதசி	மிருக சீர்ஷம்	ஸர்வ ஏகாதசி
8.2.98	" 26	ஞாயிறு	த்வாதசி	திருவாதிரை	ப்ரதோஷம்
10.2.98	" 28	செவ்வாய்	சதுர்தசி	பூசம்	பௌர்ணமி, தைப்பூசம் வடலூர் ஜோதி தரிசனம்
15.2.98	மாசி 3	ஞாயிறு	சதுர்த்தி	ஹஸ்தம்	ஸங்கட ஹர சதுர்த்தி
17.2.98	" 5	செவ்வாய்	ஷஷ்டி	சித்திரை	க்ருஷ்ண ஷஷ்டி
22.2.98	" 10	ஞாயிறு	தசமி	மூலம்	ஸர்வ ஏகாதசி
24.2.98	" 12	செவ்வாய்	திரயோதசி	உத்தராடம்	ப்ரதோஷம், சிரவண விரதம்
25.2.98	" 13	புதன்	சதுர்தசி	திருவோணம்	மஹா சிவராத்ரி
26.2.98	" 14	வியாழன்	அமாவாசை	அவிட்டம்	ஸர்வ அமாவாஸ்யை

HINDUMITHRAN Registered News Paper
Regd.No. TN/MS/ (C) / 1585 Licensed to Post without Pre Payment PP 194
Registered with Registrar of Newspapers of India -
REGD No: TN/MS (C) 520 - R.Dis. No. 5300 / 97E

HINDU MITHRAN

(A DISTINCTIVE HINDU CULTURAL MONTHLY IN TAMIZH)

Published by:

VISHVA HINDU PARISHAD

43 Ramanujam Street, T. Nagar,
Chennai - 600 017.

ANNUAL SUBSCRIPTION : Rs. 30/-
Single Copy : Rs. 3/-

Published by : S. Vedantam, Vishva Hindu Parishad at 43, Ramanujam Street, T. Nagar, Chennai - 600 017.

Printed by : C. Dhanusu at Madhava Mudra, 3, M. V. Street, Chetpet, Chennai - 31.

Editor : R.B.V.S. Manian